REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஓகஸ்ட் 22 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN තිනකරන්
வரு. 91 இல. 198 | Tuesday 22, August, 2023 | 12 பக்கங்கள் | 50/-




## உணவுப் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி;
# இலங்கை - சிங்கப்பூருக்கிடையே பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்பு



- இரு தரப்பு பாதுகாப்புகளை வலுப்படுத்துவது தொடர்பில் விரிவாக ஆராய்வு
- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூர் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சருடன் பேச்சு



இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உணவுப் பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யகோப் நேற்று பேச்சு நடத்தியுள்ளார். இதுகுறித்து,பயனுள்ள விவாதங்களை நடத்தியதாக சிங்கப்பூர் அதிபர், தனது அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூருக்கான இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யகோப் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (21) காலை நடைபெற்றது. சிங்கப்பூர் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லமான

04

## நல்லைக் கந்தன் உற்சவம் ஆரம்பம்



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம், நேற்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. மகோற்சவ திருவிழாக்கள் 25 நாட்களுக்கு நடைபெறவுள்ளன. எதிர்வரும் (13) காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் (14) காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று, அன்றைய தினம் மாலை துவஜாவரோஹன நிகழ்வும் நடைபெறும்.

(யாழ்.விசேட நிருபர்)

## நாட்டின் பணவீக்கத்தில் வீழ்ச்சி
# உணவுப் பொருட்கள் பணவீக்கம் ஜூலையில் மறை 2.5 ஆக குறைவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)




நாட்டில் பணவீக்கம் குறைவடைந்துள்ளதாக குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேற்படி திணைக்களம் இந்த வருடத்தின் ஜூலை மாதத்துக்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியையும் மாதாந்த நுகர்வோர் பணவீக்கத்தையும் வெளியிட்டுள்ளது. அதற்கிணங்க இந்த வருடத்தின் ஜூன் மாதத்தில் 10.8 வீதமாகவிருந்த நாட்டின் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 4.6 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும்

04

## நீரிழிவுக்கு புற்றுநோய் மருந்தை உட்கொண்ட நோயாளி உயிரிழப்பு

மருந்தகமொன்றில் வழங்கிய தவறான மருந்தை பயன்படுத்திய நீரிழிவு நோயாளியொருவர் உயிரிழந்துள்ளார். ஹொரான இங்கிரியவை சேர்ந்த 62 வயது பெண்ணே, இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீரிழிவு நோயாளிக்கு குறித்த மருந்தகம் புற்றுநோய் மருந்தை வழங்கியிருந்தது. இதையறியாத அந்த நோயாளி அம்மருந்தை அருந்தியதால் இந்த மரணம் ஏற்பட்டதாக உயிரிழந்தவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். 62 வயது சோமாவதி, ஹொரான வைத்தியசாலையில் தொடர்ச்சியாக

04

# நாட்டின் சிறந்த எதிர்காலத்துக்கு அரச பொறிமுறையில் மாற்றம் அவசியம்

## அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைக்கும் இயலுமை ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது



பொதுமக்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, குறுகிய காலத்தில் பெருமளவான சட்டங்களைக் கொண்டுவந்ததாகவும், வலுவான ஊழல் ஒழிப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்பித்து அதனை உரிய வகையில் சட்டமாக்கியிருப்பதாகவும் ஐக்கிய தேசிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருத்தமானவர்கள் மற்றும் பொருத்தமற்றவர்கள்என அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து பணியாற்றும் இயலுமை, ரணில் விக்கிரமசிங்க என்னும் தலைமையிடம் உள்ளது. அவரின் அனுபவங்களை தேசிய

04

# அநுராதபுரத்தில் கோர விபத்து தாயும் மகளும் ஸ்தலத்தில் பலி

## டிப்பர் வாகன சாரதி கைது




அநுராதபுரம் மேற்கு தினகரன், அநுராதபுரம் தினகரன் நிருபர்கள்

அநுராதபுரம் கதிரேசன் கோவிலுக்கு முன்னால் (21) நேற்று மதியம் டிப்பர் வாகனமொன்றுடன், மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில், தாயும் மகளும் ஸ்தலத்தில் பலியாகினர். விபத்தில் இராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின்

04

## பயிற்சிக்காக சென்று நாடு திரும்பாத
# 120 விசேட வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலுக்குள் சேர்ப்பு




பயிற்சிகளுக்காக வெளிநாடு சென்று நாடு திரும்பாத விஷேட வைத்திய நிபுணர்கள் சிலர், கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாட்டை விட்டு வெளியேறிய சுமார் 120 விசேட வைத்திய நிபுணர்களே இவ்வாறு கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். 2022 ஆம் ஆண்டு ஜனவரி 09 முதல் இவ்வருடத்தின் ஆகஸ்ட் 18 வரையான காலப் பகுதியில் 363 வைத்திய நிபுணர்கள் பயிற்சிக்காக வெளிநாடு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவர்களில், 120 மருத்துவர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை. நாடு திரும்புவதற்கு

04

# 13 ஆவது திருத்தம், அதிகாரப்பகிர்வுகள் இன முரண்பாடுகளையே தோற்றுவிக்கும்

## காலத்தை வீணடிக்காது முடிவுக்கு வருவது அவசியம்



13 ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதாகக் கூறி முன்னெடுக்கப்படும் விடயங்கள், இனங்களுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவித்துவிடுமென, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். எனவே, ஜனாதிபதி இவ்வாறான வீணான குழப்பங்களை ஏற்படுத்தி காலத்தை இழுத்தடிப்பு செய்யாமல் உடனடியாக தீர்மானமொன்றுக்கு வரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். கொழும்பு பொரளை பகுதியில் நடைபெற்ற மத நிகழ்வொன்றில்

04

# தனியார் முதலீட்டாளர் பங்களிப்புடன் சர்வதேச சந்தைக்கு கடலுணவு ஏற்றுமதி

## அமைச்சர் டக்ளஸ் – கருணா அம்மான் பேச்சு



தனியார் முதலீட்டாளர்களின் பங்களிப்புடன் கடலுணவுகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாக முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

கடற்றொழில் அமைச்சில் நேற்று (21) நடைபெற்ற இக்கலந்துரையாடலில், புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தனியார் முதலீட்டாளர்களின்

04

## அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு விவாக
# சான்றிதழ்களின் பிரதிகளை தொடர்ந்தும் பயன்படுத்த முடியும்

**06 மாதம் மட்டுமே செல்லுபடியாகுமென்பது நீக்கம்**

பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் 06 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமென தெரிவிக்கப்பட்ட விதிமுறைகள், நீக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

06 மாதங்களுக்குப் பிறகு, அந்த ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் செல்லுபடியாகாதென கூறுகின்றனர். எனினும், வழங்கப்பட்ட எந்தவொரு சான்றிதழின் பிரதி இருந்தால், புதிய

04

## மாத்தளை ரத்வத்தை தோட்ட சம்பவம்
# முகாமையாளர் பாணியிலேயே அமைச்சர் ஜீவன் பதிலளிப்பு

## கிழக்கு ஆளுநர் விளக்கம்



மாத்தளை, ரத்வத்தை தோட்டப்பகுதியில் தோட்டத் தொழிலாளி ஒருவரின் வீட்டை தோட்ட உதவி முகாமையாளர் அடித்து நொருக்கிய விவகாரத்துக்கு, தோட்ட முகாமையாளரின் பாணியிலேயே அமைச்சர்

04



03

இந்திய வீடமைப்பு கிராமங்கள்
**மட்டு., யாழ்., கண்டி, பதுளையில் 1401 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பம்**




03

**நான்கு கடவுச் சீட்டுகளுடன் விமான நிலையத்தில் பெண் கைது**
ஆட்கடத்தலுக்கு பாவிக்கலாமென சந்தேகம்

# பாதாளக் குழு கணேமுல்ல சஞ்சீவ கொத அசங்க இந்தியாவில் கைது

## இந்திய பாதுகாப்பு துறையினர் அதிரடி



பாதாளக் குழுவின் பிரபல தலைவரெனப்படும் கணேமுல்ல சஞ்சீவ மற்றும் முக்கிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவரென சந்தேகிக்கப்படும் கொத அசங்க ஆகியோர் இந்தியாவில் கைதாகியுள்ளதாக, செய்திகள் வெளிவந்துள்ளதாக புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ்விருவரையும் கைது செய்ய பொலிஸ் குழுக்கள் தேடுதலை முன்னெடுத்திருந்தபோது, 2018 இல்,

04

# நீர் தேடி அலையும் விலங்குகளுக்கு தண்ணீரில் விஷம் கலக்கும் கும்பல்

## இறைச்சியை விற்று பணம் சம்பாதிப்பதில் மும்முரம்



கொடிய வரட்சியில், தாகம் அதிகரித்து நீர் தேடி அலையும் விலங்குகளுக்கு நஞ்சூட்டி கொலை செய்து, அவற்றின் இறைச்சியை விற்பனை செய்யும் கும்பல் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடும் வரட்சியால்,நீர் தேடி அலையும் வனவிலங்குகளை இறைச்சிக்காக கொல்லும் கொடூரங்கள் அதிகரித்துள்ளன.

04

# ரயிலில் கைவிடப்பட்ட ரூ.50 இலட்சம் பெறுமதியான தங்கம் உரியவரிடம் கையளிப்பு

## கோட்டை ரயில் நிலையத்தில் சம்பவம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஐம்பது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தங்க நகைகள் மற்றும் பொருட்கள் உள்ளிட்ட கைப்பையை கண்டெடுத்த, ரயில்வே ஊழியர் ஒருவர் அதை உரியவரிடம் சமர்ப்பித்துள்ளார். மாத்தறையிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கி பயணித்த ருஹூணு குமாரி ரயிலில், பயணியொருவர் இந்த கைப்பையை தவறிவிட்டிருந்தார்.இதனைக் கண்டெடுத்த அவ்வூழியர் மனிதாபமான

04


# பஸ்ஸின் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிய மாணவன் பலி

பஸ் வண்டியின் பின் ஆசனத்தில் அமர்ந்து சென்ற மாணவன் ஒருவர், ஜன்னலுக்கு வெளியே தலையை வைத்துச் சென்றதால் மின் கம்பத்தில் மோதி உயிரிழந்தார். இச்சம்பவம் ஹபராதுவ, ருமஸ்ஸல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஹபராதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ருமஸ்ஸல பகுதியில் பஸ்ஸில் பயணித்த மாணவன் ஒருவரே,

04

# நகர்வலம்









இந்தோனேசியாவின் 78 வது சுதந்திர தினம் கொழும்பிலுள்ள இந்தோனேசியா தூத ரகத்தில் (17) நடைபெற்றது. இங்கு இலங்கைக்கான இந்தோனேசியா தூதுவர் தேவி குஸ்டினா டோபிங் கேக் வெட்டுவதனை படத்தில் காணலாம்.

படம் : ருஸைக் பாரூக்

# ஹம்பாந்தோட்டையில் கடுமையான குடிநீர் பிரச்சினை; 3867 குடும்பங்கள் பாதிப்பு

## பாதிக்கப்பட்டோருக்கு பவுஸர் மூலம் குடிநீர் வழங்க அமைச்சர் அமரவீர பணிப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலை காரணமாக மாவட்டத்தின் நான்கு பகுதிகள் பாரிய குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மேற்படி மாவட்டத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வரட்சிநிலைமை தொடர்பான கலந்தரையாடல் மாகம் ருஹுணு நிர்வாகக் கட்டிடத் தொகுதியில் (19) அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், பெலியத்தை, தங்காலை, வீரகெடிய மற்றும் அங்குணுகொலபெலஸ்ஸ ஆகிய பிரதேசங்களே பாரிய குடிநீர் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்துள்ளதோடு இப் பிரதேசங்களுக்கு குடிநீரைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக நாம் இன்று கலந்துரையாடினோம்.



மாத்தறை மற்றும் பெலியத்தை ஆகிய பிரதேசங்களுக்கு கடந்த சிலதினங்களில் ஓரளவு மழை பெய்துள்ளபோதிலும் இது வயல்களுக்கு எந்தவிதத்திலும் போதுமானதாக இல்லை. இன்னும் சில பிரதேசங்கள் நீரை பெற்றுக் கொள்ளமுடியாத பிரதேசங்களாகவும் காணப்படுகின்றன. இந்த பிரதேசங்களுக்கு பவுஸர்களினூடாக நீரைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர இங்கு உரையாற்றும் போது; மாவட்டத்தில் நிலவி வரும் வரட்சி நிலைமையின் காரணமாக குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. 3867 குடும்பங்களைச் சேர்ந்த 17,372 பேர் குடிநீர் பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளனர்.

இவர்களுக்கு பவுஸர்களினூடாக குடிநீரைப்பெற்றுக் கொடுக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வலஸ்முல்லை கெகிரிஓபட குளமும் முற்றாக வற்றிப் போயுள்ளதினால் 200 ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தங்காலை வைத்தியசாலை உட்பட அரச காரியாலயங்களும் குடிநீர்ப் பிரச்சினைக்கு உட்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு தேவையான குடிநீரையும் பவுஸர்களினூடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

### தில்லையடியைச் சேர்ந்த மொஹமட் நப்ஸான்

# தீவு முழுவதுக்குமான சைக்கிளோட்ட பயணி தென் மாகாணம் வருகை

## வெலிகம நகரில் மக்கள் வரவேற்பு



**வெலிகம தினகரன் நிருபர்**

இலங்கை முழுவதுமான சைக்கிள் சுற்றுப்பயணமொன்றை புத்தளம் 'Lagoon Team' அமைப்பின் உறுப்பினர் தில்லையடியைச் சேர்ந்த மொஹமட் நப்ஸான் ஆரம்பித்துள்ளார். போதைப்பாவனையில் இருந்து இளைஞர்களை பாதுகாத்தல், வாகன விபத்துக்களிலிருந்து சாரதிகளையும் பாதசாரிகளையும் காப்பாற்றல் மற்றும் இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் ஆகிய மூன்று திட்டங்களை அடிப்படையாகக்கொண்டு நாட்டின் 25 மாவட்டங்களையும் தொடும் நோக்கில் தனது பயணத்தை கடந்த 15ஆம் திகதி முதல் ஆரம்பித்தார்.

இச்சாதனையாளர் நேற்று முன்தினம் (20) ஞாயிற்றுக்கிழமை தென் மாகாணத்தின் வெலிகம நகரை வந்தடைந்தார். அவரை வெலிகம மக்கள் வரவேற்றதோடு மீண்டும் அவர் ஹம்பாந்தோட்டையை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்ததனால் இவரை பிரதேச மக்கள் மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தனர்.



இனிய நந்தவனம் இலங்கைச் சிறப்பு இதழின் வெளியீட்டு விழா, நேற்று காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி மாநகரில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாவதி பத்மராஜா, முன்னிலை வகித்த புரவலர் ஹாசிம் உமர், தலைமை வகித்த கழகத் தலைவர் கவிமாமணி ஜவ்பர்கான், நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட பிரமுகர்கள் பலர் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்: ஆரையம்பதி, புதிய காத்தான்குடி நிருபர்கள் )

# காட்டு யானை தாக்கி வயோதிப பெண் பலி


**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தம்புத்தேகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட திஸ்பனேபுர ரன்வன்தலாகம பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி பெண் ஒருவர் (21) காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்பனேபுர ரன்வன்தலாகம பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த பெண் அதிகாலை காலை உணவு சமைப்பதற்காக கறிவேப்பிலை கிளை ஒன்றை உடைத்து வருவதற்காக தனது வீட்டுக்கு முன்னால் உள்ள அவரது தாயின் வீட்டுக்கு சென்ற போதே காட்டு யானை இவரை தாக்கியுள்ளது.

# பாகிஸ்தானிய உணவு மற்றும் கலாசார நிகழ்வு



இலங்கையில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் இலங்கை இராஜதந்திர உறவுகளின் 75 வருட நிறைவு மற்றும் பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை ஒட்டி "பாகிஸ்தானிய உணவு மற்றும் கலாசார நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வு பாகிஸ்தானின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

பாகிஸ்தானிய சமையல் வகைகள், பாகிஸ்தானிய கலாசாரத்தை உள்ளடக்கிய நிகழ்ச்சிகள் இந்நிகழ்வில் இடம்பெற்றன.

இந்நிகழ்வு பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

உணவு மற்றும் ஆடைகளில் ஆர்வமுள்ள இலங்கையர்களுக்கு பாகிஸ்தான் உணவுகள் மற்றும் ஆடைகளை காட்சிப்படுத்துவது நிகழ்வின் மற்றொரு குறிக்கோளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரத்தில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தை தடுப்பதற்கான திட்டம் வரைவு; கலந்துரையாடல்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் பகுதிகளில் ஏற்படும் வெள்ளம் போன்ற பல்வேறு பாதிப்புகளைத் தடுப்பதற்கான பிராந்திய வரைபடத்தைத் தயாரிப்பதை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி ஒன்று அண்மையில் அநுராதபுரம் ரஜரட்ட ஹோட்டலில் தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதத்த ரணசிங்க தலைமையில் நடைபெற்றது.

மீ ஓயா, மல்வத்து ஓயா மற்றும் யாங் ஓயா ஆகிய ஆற்றுப் படுகைகளில் ஏற்படும் வெள்ளம் மற்றும் வரட்சி போன்ற அனர்த்தங்களில் இருந்து விடுபட பொதுமக்களுக்கு உதவும் வகையில் மேற்படி திட்டம் ஒன்றை தயாரிப்பது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

வரட்சி, தண்ணீர் பற்றாக்குறை மற்றும் வெள்ளம் போன்ற காலங்களில் பொது மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்ந்து, இந்த பேரழிவுகளைத் தடுப்பதற்கும் தனிப்பதற்கும் தேவையான திட்டங்களை அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இங்கு கருத்து தெரிவித்த தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் சுதத்த ரணசிங்க,

பேரிடர்கள் ஏற்படும் போது அவற்றை குறைக்கும் பணியை நம் முன்னோர்கள் செய்திருக்கிறார்கள். ஆனால் புதிய தலை முறையினருக்கு அதை வழங்க வேண்டும். ஆற்றுப்படுகையில் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்ப்பதற்கு உரிய முறையை பேணினால் இந்த பிரச்சினைகள் பலவற்றை தவிர்க்க முடியும் என தெரிவித்தார். இங்கு பலரும் பல்வேறு திட்டங்களை முன் வைத்தனர்.




அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கப் பேரவையின் களுத்துறை மற்றும் காலி மாவட்டங்களின் பணிப்பாளராக தொட்டவத்தை கிளையின் தலைவர் இஸ்மத் ரிப்தி அண்மையில் நியமனம் பெற்றுள்ளார். பேரவையின் தலைவர் இஹ்ஸான் ஏ ஹமீத், தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ரிப்திக்கு நியமனக் கடிதம் வழங்கி வைத்தார்.

(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



கெகிராவ கல்வி வலயத்தில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 06 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி எம்.எஸ். எப். சுக்ரியா வடமத்திய மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கணித அறிவு விருத்தி வினா விடைப் போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் இந்த போட்டியில் வட மத்திய மாகாணத்திலுள்ள எட்டு கல்வி வலயங்களிலும் உள்ள தமிழ் சிங்கள மொழிகளிலுள்ள பாடசாலை மாணவர்களில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுடன் போட்டியிட்டு சாதனை படைத்துள்ளார்.

அத்தோடு மாகாண மட்டத்திலிருந்து அகில இலங்கை மட்டத்தில் நடைபெறவுள்ள போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ள 21 மாணவர்களில் இவரும் ஒருவர். தமிழ்மொழி மூலம் கல்வி கற்கும் ஒரேயொரு முஸ்லிம் மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலய ஒன்றுகூடல்









பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட பழைய மாணவர் அமைப்பான ராபிததுந் நளீமிய்யீன் பேருவளை வலயத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு (19,20) ஆகிய தினங்களில் தர்கா நகர் "Hill View Resort" உல்லாச விடுதியில் நடைபெற்றது. வலய தலைவர் அஷ்ஷெய்க் பௌஸர் ஹுசைன் (நளீமி) தலைமையில் நடைபெற்ற இவ்வொன்று கூடலில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த நளீமிய்யா பழைய மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் (20) கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

# நான்கு கடவுச் சீட்டுகளுடன் விமான நிலையத்தில் பெண் கைது

## ஆட்கடத்தலுக்கு பாவிக்கலாமென சந்தேகம்

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட சேலைகளுக்குள் மறைத்து 04 கடவுச்சீட்டுகளை சட்டவிரோதமாக கொண்டு வந்த பெண் ஒருவரை, கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

புத்தளம் கற்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 48 வயதுடைய வர்த்தகப் பெண் ஒருவரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



சந்தேக நபர் நேற்று (21) அதிகாலை 04.14 மணியளவில் சென்னையிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL126 இல், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் கொண்டு வந்த பொதியை சோதனையிட்ட போது அங்கு அடுக்கிவைக்கப்பட்டிருந்த சேலைகளுக்குள் 04 கடவுச்சீட்டுகள் இருந்தன. இவற்றை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றினர்.

ஐரோப்பாவுக்கு தப்பிச் செல்வதற்காக இந்த கடவுச்சீட்டுகளை ஆட்கடத்தல்களுக்கு வழங்க இப்பெண் திட்டமிட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# லாவோஸ் கொன்சியூலர் சபாநாயகருடன் சந்திப்பு



லாவோஸ் மக்கள் ஜனநாயகக் குடியரசின் இலங்கைக்கான கொன்சியூலர் மனிலே திபலான்சி, அண்மையில் (17) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இரு நாடுகளுக்குமிடையேயான உறவை மேம்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக இரு நாடுகளுக்குமிடையிலான பௌத்த கலாசார நிகழ்ச்சிகளை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடப்பட்டன. 04

## இந்திய நிதி உதவியிலான வீடமைப்பு கிராமங்கள்


# மட்டு., யாழ்., கண்டி, பதுளையில் 1401 வீடுகளுக்கான பணிகள் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கண்டி, பதுளை உள்ளிட்ட மாவட்டங்களில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்படும் வீட்டுத் திட்டங்களில், 1401 வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் இதுவரை 661 வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 338 வீடுகளுக்கான நிர்மாணப் பணிகளை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த அதிகாரி சபையின் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.


இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் மூலம் நாடளாவிய ரீதியில் 101 வீடமைப்புக் கிராமங்கள் உருவாக்கப்படவுள்ளது. அவற்றில் ஏழு



கிராமங்களுக்கான வீடுகள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, கண்டி,வவுனியா, பதுளை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலே நிர்மாணபணிகள் நிறைவடைந்துள்ளன. இவ்வீடுகளே பயனாளிகளுக்கு 04

# ரயில்வே வேலைத் தளத்துக்கு அமைச்சர் பந்துல விஜயம்





தெமட்டகொடையிலுள்ள TANTRI நிறுவனத்துக்கு சொந்தமான தெமட்டகொடை ரயில் பெட்டி திருத்தும் வேலைத்தளத்தை பார்வையிட (18) போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

போக்குவரத்திலிருந்து முற்றாக அகற்றப்பட்ட ருமேனியா பவர்செட் ரயில் பெட்டிகள் இந்த வேலைத்தளத்தில் மீண்டும் முற்றாக திருத்தப்படுகின்றன.

ஒரு ரயில் பெட்டியை முற்றாக திருத்துவதற்கு 25 மில்லியன் ரூபா செலவாவதாகவும் வெளிநாடுகளில் ரயில் பெட்டிகளை விலைக்கு வாங்கி கப்பல் கட்டணம் மற்றும் காப்புறுதி கட்டணங்களை செலுத்தி இலங்கைக்கு கொண்டு வரும் போது அதற்கு இதை விட பெருந்தொகை பணத்தை செலவிட வேண்டியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ்வேலைத் தளத்தில் பெருமளவானோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுப்பதோடு பெருமளவு பணத்தையும் மீதப்படுத்தலாம். அத்துடன் ரயில்வே திணைக்களம் மற்றும் TANTRI நிறுவனமும் இணைந்து தற்போது பயன்பாட்டில் உள்ள எல்ல ஒடிசி ரயிலுக்கு பதிலாக, புதிய சொகுசு ரயிலொன்றை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் அதற்கு தேவையான ஒத்துழைப்பை பெற்று தர நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.08.20
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5212
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,679,728.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 4 0 4 4 5 0

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம் 1560
20/08/2023
72513
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,802,480.00
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 25
வெற்றி இலக்கங்கள் 07 23 29 30
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

**தன நிதானய**
தேதி 2023/08/20
சீட்டிழுப்பு இலக்கம் 1242
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,849,301.60
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 11 30 44 69
விஷேட ஆங்கில எழுத்து U
Double Chance இலக்கம் 40544

**ராசிசுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 521
சீட்டிழுப்பு திகதி 2023-08-20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,854,585.60
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 21 25 30 35
விசேட இலக்கினம் மிதுனம்

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3454
சீட்டிழுப்பு திகதி 2023.08.20
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,702,788.80
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 37 46 47 75
விசேட எழுத்து Y
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 79746

**லக்கி 7**
திகதி 20.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0038
வெற்றி இலக்கினம் மீனம்
L7 இலக்கம் 0 8
வெற்றி இலக்கங்கள் 2 0 7 6 7 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரிகளுக்கு அஞ்சலிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.

| தொடர் இல. | பரீட்சை | நடைபெறும் திகதிகள் | இடம் |
|---|---|---|---|
| 01 | இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021(2023) | 2023 ஆகஸ்ட் 26, 27 | கொழும்பு |

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரியுடன் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்பு கொள்ளவும். இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள www.doenets.lk இணையதளத்தினூடாக பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தொலைபேசி :- 011-2785230/ 011-3661244/ 011-3661246
தொலைநகல் :- 011-2784232

**எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர**
**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

5/5 2/AD/2023
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**
2023 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி

# இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

LAKE HOUSE
தினகரன்
தினகரன் வாரமஞ்சரி

## திறந்த கட்டுரைப் போட்டி

### தொனிப் பொருள்

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

### பரிசுத் தொகை

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

### கட்டுரையின் வடிவம்

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீ தியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk

முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஓகஸ்ட் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

SUPPLY, INSTALLATION & MAINTENANCE OF COLOUR PRINTER WITH PURCHASE OF PET (Polyethylene Terephthalate) SHEETS BASIS - Q 416/23

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் 2023.09.14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பின்வரும் எக்ஸ்-கதிர் நுகர்வுப் பொருளை வழங்குவதற்காக நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| Tender No. | Item | Qty | Non-refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| Q 416/23 | Supply, Installation & Maintenance of Colour Printer with Purchase of PET (Polyethylene Terephthalate) Paper Basis – A3 | 8000 Nos. | 3,000.00 |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள முகவர்கள் அல்லது உற்பத்தியாளரொருவரின் சார்பாக பெயர் குறிப்பிடப்படுபவர்கள் அல்லது கேள்விதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை இரு பிரதிகளில் கொள்வனவு செய்யலாம்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று.
(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மேலே கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
(iii) வியாபார பதிவின் சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று.

2. சமர்ப்பிக்கப்படும் விலைமனுவின் கேள்விப் பெறுமதியானது 5 மில்லியன் ரூபாவாக அல்லது அதற்கு மேலாகவிருப்பின், பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் முன்வைப்புடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விலைமனுக்கள் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களைத் தவிர வேறேதாவது படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. 2023.08.23 ஆம் திகதியிலிருந்து 2023.09.13 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
6. 2023.09.14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் மூடப்பட்டு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
7. எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும் நிராகரிப்பதற்கும்/ கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான சுயஉரிமையை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் கோச் ஹார்ன்பொல் மற்றும் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ ஆகியோர் நீதியமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் இதில் கவனம் செலுத்தப்பட்டது.

# ஐக்கிய தேசிய கட்சி பொதுக்கூட்டம்



**சாவகச்சேரி விசேட நிருபர்**

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுக் கூட்டம் நேற்று பிற்பகல் ஐக்கிய தேசிய கட்சியின் சாவகச்சேரி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் கு.சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில்பிரதம விருந்தினராக ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் ரங்க பண்டார கலந்து கொண்டார்.

மேலும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்,சர்வமத குருமார்கள்,கட்சி செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது கட்சியில் புதிதாக இணைந்த உறுப்பினர்களுக்கு கட்சியின் பொதுச் செயலாளரால் கட்சியின் உறுப்புரிமை வழங்கி வைக்கப் பட்டது.

# நானுஓயாவில் 50 அடி பள்ளத்தில் விழுந்து சிறிய ரக கார் விபத்து

## ஒரே குடும்பததைச் சேர்ந்த அறுவர் காயம்



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா தலவாக்கலை ஏ07 பிரதான வீதி கிரிமிட்டி பகுதியில், பிலியந்தலையிலிருந்து நுவரெலியாவுக்கு பயணித்த வாகனமொன்று, 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை (21) இடம்பெற்ற இவ்விபத்தில் 06 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டனர்.வாகனத்தில் பயணத்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் காயமடைந்து, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். வாகனத்தின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் போனதால்,இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் நானுஓயா பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நீரிழிவுக்கு புற்றுநோய்....

சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில் கடந்த (31) மருந்துகளை பெறுவதற்காக அவரது கணவர் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். ஆனால், அங்கு மருந்துகள் கிடைக்கவில்லை.இதனால், தனியார் மருத்துவமனையில் மருந்துகளை கொள்வனவு செய்துள்ளார். இந்த மருந்தகதிலிருந்தே தவறான மருந்து வழங்கப்பட்டுள்ளது.

# போதைப் பொருள் ஒழிப்பு செயற்பாடு; தேசபந்து தென்னகோன் தலைமையில் விசேட குழு

***(லோரன்ஸ் செல்வநாயகம்)***

நாட்டில் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் போதைப்பொருள் உள்ளிட்ட குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க இச்செயற்றிட்டத்தின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழு மேற்படி குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தியுள்ளது.

தெரிவுக் குழுவின் தலைவர் அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் தெரிவுக் குழு அண்மையில் கூடியுள்ளது. இதன்போது போதை பொருள் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பில் பொலிஸ், அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுக்கான தேசிய சபை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு அந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. மேற்படி பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட குழுவுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் டிரான் அலஸ் இதன்போது தெரிவித்துள்ளார்.

## உணவுப் பொருட்கள்....

குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜீ,எம் பி.அநுர குமார தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜூன் மாதத்தில் 2.5 வீதமாக பதிவாகியுள்ள உணவுப் பொருட்கள் பணவீக்கமானது, ஜூலை மாதத்தில் 2.5 வீதமாக குறைவடைந்துள்ளது. அதேவேளை, ஜூன் மாதத்தில் 18.3 வீதமாக காணப்பட்ட உணவு அல்லாத பொருட்களின் பணவீக்கம் ஜுலை மாதத்தில் 10.9 வீதமாக குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதாகவும் அத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## அநுராதபுரத்தில்....

தாயான 36 வயதுடைய ஆசிரியை மற்றும் 08 வயதுடைய மகளும் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள், அதே திசையில் வந்த ரிப்பர் வாகனத்துடன் மோதி இவ்விபத்து நேர்ந்தது. இதில், இருவரும் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை 37 வயதுடைய ரிப்பர் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## 13 ஆவது திருத்தம்...

கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டு மக்கள் 13 ஆவது திருத்தச்சட்டம் பற்றி கதைக்கிறார்களா? இல்லை. பொருளாதார பிரச்சினைகள், அதிகரிக்கப்பட்ட நீர்க் கட்டணம், செலுத்த முடியாமல் உள்ள மின் கட்டணம், சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள போஷாக்கின்மை, கடைக்குச் சென்று பொருட்களை அதிக விலைக்கு கொள்வனவு செய்ய முடியாமை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பிலேயே அதிகம் கதைக்கின்றனர். மக்களுக்கு வருமானம் பெற்றுக் கொள்ளும் வழிகள் கிடையாது. தமக்கு நிம்மதியாக வாழ்வதற்கான சூழல் ஒன்றை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புமாறே மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வாறு பல பிரச்சினைகள் காணப்படும் போது ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஏன் அடிக்கடி கதைக்கிறார்?. இந்த சந்தர்ப்பத்தில் 13 தொடர்பில் ஏன் கதைக்க வேண்டும். இவற்றை பார்க்கும் போது இரண்டு விடயங்கள் தெரிகிறது. ஒன்று 13 அமுல்படுத்தப் போவதாக கூறி நாட்டில் நிலவும் உண்மையான பிரச்சினைகளை மறைப்பது. இரண்டாவது, அடுத்த வருடம் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளை பெற்றுக் கொள்வது என்பவையாகும். எவ்வாறாயினும் ஜனாதிபதி 13 ஆவதை நடைமுறைப்படுத்த போவதுமில்லை. நான் அதனை செய்வேன் என இந்தியாவையும், தமிழ் அரசியல்வாதிகளையும், வடக்கு கிழக்கு மக்களையும் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்.13 என்பது அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும். முதலில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தினால் 13 ஆவது திருத்தியுள்ள 98 வீதமான விடயங்களை பூர்த்தி செய்ததை போன்றதாகும். பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் காணி என்பன தொடர்பில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுக்க முடியுமல்லவா? என்றார்.

## 120 விசேட வைத்திய...

அனுமதிக்கப் பட்டுள்ள இவ் வைத்திய நிபுணர்கள்,சேவையில் ஈடுபடுவதானால் பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்ய வேண்டுமென சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## தனியார் முதலீட்டாளர்...

பிரதிநிதிகள் குழுவினரும் பங்கேற்றிருந்தனர். சர்வதேச சந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டுக்கு தேவையான அந்நியச் செலாவணிகளை பெற்றுக்கொள்ள முடியும். கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் இத்திட்டம் குறித்து அதிகாரிகள் மத்தியில் அமைச்சர் வலியுறுத்தினார். இதற்காக புலம்பெயர் முதலீட்டாளர்களின் பங்களிப்புக்கள், தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பு மற்றும் ஊக்குவிப்புக்களை அமைச்சர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்.

## நீர் தேடி அலையும்...

தண்ணீரில் விஷம் கலந்தே,இக் கும்பல் விலங்குளை கொன்று வருகின்றனர். வனவிலங்குகள் நீர்அருந்தும் நீர்க் குழிகள்,வற்றிய ஓடைகளிலே நஞ்சுகள் கலக்கப்படுகின்றன.

யால தேசிய பூங்காவில் இவ்வாறான நடவடிக்கையில் சட்டவிரோத வேட்டைக்காரர்கள் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான மாமிசங்களை உண்பவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படலாமென அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போதைய காலநிலை காரணமாக நீரைப் பெறுவதில் வன விலங்குகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டு, நீருக்காக அலைந்து திரிகின்றன. இதனைப் பயன்படுத்தி வற்றிய குளங்கள் போன்றவற்றிற்கு அருகில் சட்டவிரோத வேட்டைக்காரர்கள் சிறிய குழிகளை வெட்டி அதில் நஞ்சுகளை கலக்கின்றனர்.

கதிர்காமத்துக்கு செல்லும் யாத்திரிகர்களை இலக்குவைத்தே, இந்த மாமிசம் விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான சம்பவங்கள் குறித்து அறிந்தால் மக்கள் தகவல் தெரிவிக்கவேண்டுமெனவும் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சான்றிதழ்களின்...

நகலைப் பெறத் தேவையில்லையென திணைக்களம் மேலும் தெரிவிக்கிறது.

பிறப்பு, இறப்பு, விவாக பதிவேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே புதிய நகலை சமர்ப்பிக்க வேண்டுமென பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கின்றது. இது தொடர்பில், பதிவாளர் நாயகம் திணைக்களம், கல்வி, வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ரயிலில் கைவிடப்பட்ட...

முறையில் நடந்து சகலரதும் அன்புக்குரியவராகியுள்ளார்.

கண்டி கடுவாத்தோட்டை பகுதியைச் சேர்ந்த லக்சிறி சம்பத் மற்றும் அவரது பாரியார் இருனி நிமாஷா ஆகியோருக்கு சொந்தமான மேற்படி தங்க ஆபரணப்

பொருட்களும் பையுமே,தவறவிடப்பட்டிருந்தது.

மாத்தறையைச் சேர்ந்த இருனி நிமாஷா, அவருடைய கணவரின ஊரான கண்டிக்குச் சென்று அங்கிருந்து மீண்டும் ரயிலில் பயணிக்கும் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவர்களுக்கு சொந்தமான மேற்படி பையை, கொழும்பு கோட்டையில் ரயிலிலிருந்து இறங்கும் போது, மறந்து விட்டு இறங்கியுள்ளனர். கொழும்பு கோட்டைக்கு வந்த ரயிலை மாளிகாவத்தை தரிப்பிடப் பிரிவுக்கு அனுப்புவதற்கு முன்பதாக, ரயில் வே பாதுகாப்பு அதிகாரிகள் அதனை சோதனையிடுவது வழக்கம்.

அந்தவகையில் மாத்தறை, ரயில்வே பாதுகாப்பு அதிகாரி அலுவலகத்தில்,உத்தியோகத்தரான ஏ.ஏ.லங்கானந்த மற்றும் எல்.டி.பிரியங்கர ஆகிய இருவருமே

இந்த பயணப் பையை கண்டெடுத்துள்ளனர். அந்த பயணப்பையில் 3 பவுண் தங்க மாலை, பிரேஸ்லட் உள்ளிட்ட தங்க நகைகளும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆப்பிள் ரக கையடக்கத் தொலைபேசியும் 35 இலட்சம் பெறுமதியான வங்கி வைப்புச் சான்றிதழ், வங்கிக் கணக்குப் புத்தகம், சாவி மற்றும் லைசன் அட்டை ஆகியன உள்ளடங்கியிருந்தன.

## முகாமையாளர்...

ஜீவன் தொண்டமான் பதிலளித்துள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார். மாத்தளை ரத்வத்தை தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர் ஒருவரால் கட்டப்பட்ட வீட்டை, தோட்ட உதவி முகாமையாளர் அடித்து நெருக்கியிருந்தார். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்,

“தோட்டத் தொழிலாளர்களுடன் நிர்வாகத்தினர் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டால் அதே அணுகு முறையைத்தான், இ.தொ.காவும் தோட்ட முகாமையாளர்களிடம் கடைப்பிடிக்கும். மாறாக அடாவடித்தனத்தில் தொழிலாளர்களை அணுகினால் அதே பாணியிலேயே, அவர்களுக்கு இ.தொ.கா பதிலளிக்கும். தோட்டத் தொழிலாளர்களை நாகரீகமாக நடத்த வேண்டும் என்பதில் இ.தொ.கா உறுதியாகவுள்ளது. தோட்டங்கள் மாத்திரமே கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மாறாக அங்கு வாழும் மக்களை அல்ல.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர், தோட்ட முகாமையாளருடன் சரிக்கு சமமாக தொழிலாளர்கள் அமர்ந்து பேசும் நிலையை உருவாக்கினார்கள்.

இவ்வாறான சூழலில் தோட்டத் தொழிலாளர்களால் கட்டப்பட்ட வீட்டை இடித்தமையையை இ.தொ.கா வன்மையாக கண்டிக்கிறது. அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரமேஸ்வரன் ஆகியோர் மக்கள் பக்கம் நின்று செயல்பட்டுள்ளனர்.

இத்தோட்டம் மட்டுமல்ல அடாவடித்தனத்தில் ஈடுபடும் அனைத்து முகாமையாளர்களுக்கும் இதுவொரு பாடமாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லையெனவும் அவர் கூறியுள்ளார்.

## பஸ்ஸின் ஜன்னலுக்கு....

ஜன்னலுக்கு வெளியே தலையை வைத்து சென்றுள்ளார்.

உடுபத்தாவ, குளியாபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 16 வயது பாடசாலை மாணவரே, இவ்வாறு உரிழந்ததாக பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பௌத்த அறநெறி பாடசாலை கல்விச்சுற்றுலாவுக்காக நேற்று மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸில், இம் மாணவர் பயணித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மாணவன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டின் சிறந்த....

நலனுக்காக பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் உருவாகியிருப்பதாகவும் குறிப்பிட்ட வஜீர அபேவர்த்தன, நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் வேண்டுமெனில் அரச பொறிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

அதேபோல், பாராளுமன்றத்தில் காணப்படும் அரசியல் ஒற்றுமையின்மை நாட்டின் முன்னேற்றத்துக்கு தடையாக இருப்பதாகவும், அரசியல்வாதிகளின் பலவீனமாக விளையாட்டுக்களை விடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்துடன் இணைந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த வஜீர அபேவர்தன,

அரசியல் கட்சிகள் தங்களுக்கிடையிலான போட்டிக்காக அள்ளிவீசிய வாக்குறுதிகளின் பலனாக நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது.

இறுதியில் பாராளுமன்றத்தின் 225 பேரையும் நாட்டு மக்கள் நிராகரித்தனர். இவ் வேளையில் கடந்த மே மாதம் 12ஆம் திகதி பிரதமராகவும், கடந்த ஜூலை 20 இல்,நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வீழ்ந்து கிடந்த நாட்டை சீரமைத்து, தன்னை ஒரு தேசிய தலைவராக நிரூபித்துக்காட்டி நாட்டையும், தேசத்தையும் பாதுகாக்க முன்வந்துள்ளார்.

அவரது அரசியல் அனுபவத்தைப் பார்க்கும் போது, அவர் முன்னாள் ஜனாதிபதிகளான, ஜே.ஆர். ஜயவர்த்தன, ரணசிங்க பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோருடனும் பணியாற்றி, தற்போது பொதுஜன பெரமுனவுடனும் இணைந்து செயற்படுகிறார்.

அரசியல் களத்தில் அதிகாரத்தைப் பெறுவதற்காக ஒருவரை ஒருவர் திருடர் என்று வசைபாடிக் கொண்டிருக்கும் கலாசாரத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காகவே ஊழல் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம், மிக சக்திவாய்ந்த ஊழல் தடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, அதை சட்டமாக்கி, நாட்டை சரியான பாதைக்கு வழிநடத்தி வருகிறார். இந்த நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணமான இரண்டு பிரதான நிறுவனங்களான நிதியமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மறுசீரமைப்பு முழு அரச பொறிமுறையிலும் (System Change) செய்யப்பட வேண்டும். மறுசீரமைப்பு செயல்முறை பாராளுமன்றத்தின் ஊடாக மக்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது.

அத்துடன், உலகில் ஊடகங்கள் தொடர்பான சட்டங்களை பார்க்கும்போது, உதாரணமாக, சிங்கப்பூரின் தகவல் தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையச் சட்டம் மிகவும் சக்திவாய்ந்த ஒன்று என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாதாளக் குழு கணேமுல்ல....

மன்னாரிலிருந்து படகு மூலம் இவர்கள் தப்பிச் சென்றதா அந்தப் புலனாய்வு அதிகாரி மேலும் தெரிவித்தார். இந்தியாவுக்கு தப்பிச் சென்ற கணேமுல்ல சஞ்சீவ தனது சகாவான கோத்தா அசங்கவுடன் இணைந்து இலங்கையில் போதைப்பொருள் கடத்தல், கப்பம் பெறுதல் மற்றும் கொலைகள் செய்வதற்கென ஏனைய சகாக்களை வழிநடத்தியதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருவரையும் கைது செய்ததற்கான காரணம் குறித்து இந்திய பாதுகாப்புப் படையினரிடமிருந்து இது வரை தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் உளவுத்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## லாவோஸ் கொன்சியூலர்... (03 ஆம் பக்கத் தொடர்)

லாவோஸ் மக்கள் குடியரசின் வணிகச் செயற்பாடுகள் குறித்தும், அந்நாட்டிலிருந்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் குறித்தும் இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், லாவோஸ் மக்கள் குடியரசு சார்பில் இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் இலங்கை லாவோஸ் பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

## இலங்கை சிங்கப்பூருக்கிடையே...

(The Istana) இஸ்தானா மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கப்பூர் ஜனாதிபதி மகத்தான வரவேற்பளித்தார்.சுமுகமாக கலந்துரையாடிய பின்னர், இருதரப்பு பேச்சுவார்த்தையில் இரு தலைவர்களும் ஈடுபட்டனர்.

சிங்கப்பூர் மற்றும் இலங்கைக்கிடையிலான நீண்டகால இருதரப்பு தொடர்புகளை பலப்படுத்திக் கொண்டு, முன்னோக்கிச் செல்வது தொடர்பில் இதில், கலந்தாலோசிக்கப்பட்டது.

உணவுப் பாதுகாப்பு, மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உள்ளிட்ட துறைசார் ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்திக்கொள்ள இரு தலைவர்களும் கவனம் செலுத்தினர்.

இதையடுத்து சிங்கப்பூர் ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில், “எமது நட்புறவானது மனிதர்களின் அடிப்படையிலேயே வலுவாக நிலைத்து நிற்கும். அந்த தொடர்புகளை மேலும் பலப்படுத்திக்கொள்வதற்கான பரந்த வாய்ப்புகள் காணப்படுகின்றன. இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிங்கப்பூர் சுற்றுப்பயணம் பலன்மிக்கதாகவும் வெற்றிகரமானதாகவும் அமையட்டும்" என பதிவிட்டிருந்தார்.

அதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென் (Ng Eng Hen) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்றும் நேற்று (21) பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது, இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடை யிலான பாதுகாப்பு தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அதேபோல், தெற்காசிய வலயத்தின் பொது பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியான தகவல் பரிமாற்றம் மற்றும் உரிய வகையிலான தொடர்பாடல்களை பேண வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். வலயத்தின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக் கொள்ள இரு தரப்பும் அர்ப்பணிக்க வேண்டும் என்ற இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

## மட்டு., யாழ்., கண்டி,... (03 ஆம் பக்கத் தொடர்)

கையளிக்கப்பட்டுள்ளன.

மாத்தளை, கிளிநொச்சி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

அந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2400 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மிகுதியான வீடுகளையும் விரைவாக நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# இயேசு கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த முனிவர் திருமுழுக்கு யோவான்

## முனிவரது திருப்பாடுகளின் நினைவு தினம் 29 ஆம் திகதி சிறப்பிக்கப்படுகிறது


திருமுழுக்கு யோவானின் பாடுகளின் நினைவு தினத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி கத்தோலிக்கத் திருச்சபை சிறப்பிக்கின்றது

திருமுழுக்கு யோவான் ஆண்டவர் இயேசுவின் வருகை தொடர்பில் முன்னறிவித்தவர்.இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர்.

அவர் ஒரு முனிவர் போன்று காட்டில் வித்தியாசமான,எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். அவர் காட்டுத் தேனையும் வெட்டுக் கிளியையும் உணவாகக் கொண்டவர் என அவரது வரலாறு தெரிவிக்கின்றது.

இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் முன்னறிவித்த போது, அவரது வார்க்

கச்சையையும்அவிழ்க்க தான் தகுதியற்றவர் என தம்மை மிக பணிவாக குறித்துக் காட்டியவர் அவர்.



திருமுழுக்கு யோவான் செக்கரியா என்கிற குருவின் மகன். குருத்துவம் என்பது குடும்ப வழியில் வருவது. அதிகாரவர்க்கத்தினரின் எண்ணப்படி, திருமுழுக்கு யோவான் ஒரு குரு. எனவே, அவருடைய நண்பர்கள், உறவுகள், திருமுழுக்கு யோவான் ஏன் இப்படி வேறுபாடான வாழ்வை வாழ்ந்து வருகிறார்? என்று அவரிடத்தில் கேள்விகேட்பது இயல்பு.

பாலஸ்தீனத்தில் எந்த ஒருவர் இறைவனின் பெயரால் இறைவார்த்தை அறிவித்தாலும், அவர் உண்மையான இறைவாக்கினரா? அல்லது போலியானவரா? என்பதை விசாரிக்கும் உரிமை அப்போதைய தலைமைச்சங்கத்திற்கு இருந்தது. அந்த வகையில் அவர்கள் அவரை விசாரிப்பதற்காக பரிசேயர்களை அனுப்பி யிருந்தார்கள்.

திருமுழுக்கு யோவான் யாரைப்பற்றியும், எதைப்பற்றியும் கவலைப்படாமல் நற்செய்தி அறிவிப்பு ஒன்றையே தன்னுடைய வாழ்வின் நோக்கமாகக் கொண்டிருந்தார்.

போதனை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும், போதிப்பவர் இப்படித்தான் போதிக்க வேண்டும் என்ற மரபை உடைத்தவர் அவர்.

பொதுவாக, மரபு என்ற பெயரில் நாம் சிறையில் அடைக்கப்படுகிறோம். அது நமக்குள் இருக்கக்கூடிய புதுமை எண்ணங்களையும் நம்மோடு அடைத்துவிடுகிறது.

திருமுழுக்கு யோவானின் தன் உணர்வு மற்றும் தன்வெளிப்பாடு இரண்டையுமே நற்செய்தி வாசகம் நன்கு எடுத்துக்காட்டுகிறது.

தாம் மெசியா அல்லர், மெசியாவின் முன்னோடி என்ற தன் உணர்வை யோவான் கொண்டிருந்தார்.

எனவே, அவர் தாழ்ச்சியுள்ளவராக, பெரிய எதிர்பார்ப்புகள் அற்றவராக, எளிமையாக வாழ முடிந்தது.

அதைவிட முக்கியமாக, தாம் மெசியா அல்லர், அவரது முன்னோடியே என்பதைப் பிறரிடம் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவும், அறிக்கையிடவும் அவரால் முடிந்தது.

மானிடரில் பெரும்பாலானோர் தமது உண்மையான தன்மையை மறைத்து, தாம் இல்லாத வேறொரு ஆளாக முகமூடி அணிந்துகொண்டு வாழ்கின்றனர் எனச் சொல்கின்றனர் உளவியலாளர்.

பிறரது பாராட்டை, அங்கீகரிப்பை; பெற வேண்டும் எனத் துடிப்போர்தான் இத்தகைய முகமூடிகளை அணிந்துகொண்டு நாடகம் ஆடுகின்றனர். யோவானுக்கு அந்தத் தேவை இருக்கவில்லை. ஒரு முன்னோடியாக, மிதியடி வாரை அவிழப்பவராக இருப்பதில் அவர் நிறைவு கொண்டார்.

இத்தகைய பின்னணியில்,

அக்காலத்தில் ஏரோது தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான்; அவள் பொருட்டு ஆள் அனுப்பி யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான்.

ஏனெனில் யோவான் ஏரோதிடம், "உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல" எனச் சொல்லி வந்தார். அப்போது ஏரோதியா அவர்மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவரைக் கொலை செய்ய விரும்பினாள்; ஆனால் அவளால் இயலவில்லை.

ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்துவந்தான்.

அவர் சொல்லைக் கேட்டு மிகக் குழப்பமுற்ற போதிலும், அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான். ஒரு நாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது.

ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும் நூற்றுவத் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான்.

அப்போது ஏரோதியாவின் மகள் அந்த விருந்துபசாரத்தில் நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். பெரும் மகிழ்ச்சியடைந்த அரசன் அச்சிறுமியிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்" என்றான்.

"நீ என்னிடம் எது கேட்டாலும், ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன்" என்றும் ஆணையிட்டுக் கூறினான்.

அவள் அப்போது வெளியில் சென்று, "நான் அரசனிடம் என்ன கேட்கலாம்?" என்று தன் தாயை வினவினாள். அவளோ, "திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள்" என்றாள்.

உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து, "திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும்" என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அரசன் மிக வருந்தினான். ஆனாலும் விருந்தினர் முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை. உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டு வருமாறு பணித்தான்.



அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி, அதை ஒரு தட்டில் கொண்டு வந்து அச்சிறுமியிடம் கொடுக்க, அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள்.

இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார்கள் என ஸ்நாபக அருளப்பரின் பாடுகள் நிறைந்த மரணம் தொடர்பில் கூறப்படுகிறது.

**எல்.செல்வா.**




## மரணத்தின் கருவிகளை வாழ்க்கையின் கருவிகளாக மாற்றுவதற்கு உதவுவோம்

### பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ்



*மனித இதயங்களில் இருந்து வெறுப்பு வன்முறையை ஒழிக்க உதவ வேண்டியது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

*ஆகஸ்ட் 19ஆம் திகதி சனிக்கிழமை உலக மனிதாபிமான தினத்தையொட்டிய செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*ஆயுதங்கள் பயன்படுத்துவதை தடுத்து அதனை ஒதுக்கி வைப்பதை ஊக்குவிப்போம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.*

*வெறுப்பு மற்றும் வன்முறையை மனித இதயங்களில் இருந்து ஒழிக்க உதவுவது நம் ஒவ்வொருவரின் பொறுப்பு.*

*ஆயுத ஒழிப்பை ஊக்குவிப்பதன் வழியாக இராணுவ செலவினங்களைக் குறைத்து, அதிகமான மனிதாபிமான தேவைகள் வழங்கப்படுவதற்கும் மரணத்தின் கருவிகளை வாழ்க்கையின் கருவிகளாக மாற்றுவதற்கும் நாம் உதவலாம்*

*என்றும் அவர் தமது டுவிட்டர் பக்கத்தில் குறுஞ்செய்தி வாயிலாக வலியுறுத்தியுள்ளார்*

## 'மரியன்னையின் ஆசிய முகம்' கண்காட்சி






களுத்துறை இடைநிலை குருத்துவக் கல்லூரி ஏற்பாடு செய்திருந்த 'மரியன்னையின் ஆசிய முகம்' என்ற கண்காட்சியினை கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு என்டன் ரஞ்சித் ஆண்டகை பார்வையிட்டதுடன் அந்த கல்லூரியின் குருமட அதிபர் அருட்பணி சிசில் ஜோய் அடிகளாருடன் இணைந்து விசேட திருப்பலி பூசையினையும் நிறைவேற்றினார். அந்த நிகழ்வுகளையும் பங்கேற்ற விசுவாசிகளையும் கண்காட்சியையும் படங்களில் காணலாம்.
படங்கள்: மத்தியூ ஜேசுதாசன்களுத்துறை இடைநிலை

## "ஆண்டவரால் ஆகாதது ஒன்றுமில்லை"

# இயேசுவின் மனதை வெற்றிகொள்ளும் கனானியப் பெண்ணின் விசுவாசம்

*விசுவாசம் நம் அனைவரிடத்திலும் கூடுதலாகவும் குறைவானதாகவும் இருக்கலாம். தளம்பாத விசுவாசம் எம்மை கடவுளிடத்தில் மிக மிக நெருங்கச் செய்கிறது. அதனையே கடந்த ஞாயிறு வாசகத்தில் கடவுள் நமக்கு உணர்த்துகின்றார்.*

*கடந்த ஞாயிறு வழிபாட்டில் நம்மைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் விசுவாசத்தைப் பற்றிய அழகிய ஒரு நிகழ்ச்சி தரப்பட்டுள்ளது.*

*விசுவாசம் பற்றிப் பல வகையிலே நாம் விளக்கம் பெறலாம். ஆனால் நற்செய்தி தரும் விசுவாசம் என்பது புதுமையாக உள்ளது.*

*விசுவாசம் நம்பிக்கை என்பது நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை எனலாம். விசுவாசம் என்பது இரு துருவங்கள் ஒன்றாகச் சந்திப்பது.*

*வாக்கு மாறாதவர் தேவன். தன் உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் தவறாதவர். நம்மை நோக்கி வருகிறார். எனவே உடன் படிக்கையில், நம் வாக்குறுதியில் தவறும் நாம் அந்த உன்னத தேவனை நெருங்க அவரோடு ஒன்றிக்க நடக்கும் சந்திப்புதான் விசுவாசம்.*

*இதற்குத் தகுந்த சான்றுதான் நற்செய்தியில் தரப்பட்டுள்ள கனானேயப் பெண்ணின் விசுவாசம்.*

*.சில சமயத்தில் நாம் கடவுளின் மக்கள். நமது விசுவாசமே உயர்ந்தது என எண்ணி பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்மைச் சாராத சிலர் விசுவாசத்தில் ஊன்றியவர்களாய், அர்ப்பணத்தில் நிறைவுள்ளவர்களாய் இறைவனோடு இரண்டறக் கலந்தவர்களாக வாழ்வதை நாம் பார்க்க முடியும்.*

*அதற்குச் சான்றுதான் கனேனியப் பெண். இவள் ஒரு புறவினத்தாள். கொச்சைத் தமிழிலே சொல்ல வேண்டுமானால் ஒரு அஞ்ஞானி . தன் எளிய விசுவாசத்தோடு இயேசுவை நெருங்குகிறாள். தன் அர்ப்பணக் காணிக்கையாக தன் மகளை முன் வைக்கிறாள். என் மகளை குணமாக்கும் என்று வேண்டுகிறாள்.*

*சீடர்களோ முணு முணுக்கிறார்கள். கோபம் அடைகிறார்கள். எரிச்சல்படுகிறார்கள். இயேசு இல்லையென்றால் அடித்தே துரத்தியிருப்பார்கள்.*

*இவர்களையும் தொட வேண்டும். என்ற சிந்தனையில் நம் இறைவன் இயேசு ஒரு கொள்கையைச் சொல்கிறார். நான் இஸ்ரயேல் மக்களுக்கல்லவா சொந்தம். அவர்களே புதுமை பெறும் வரம் பெற்றவர்கள்.*



*ஆனால் அந்தப் பெண்ணின் விசுவாச தத்துவத்தைப் பாருங்கள். அவர்கள் உம் மக்கள் தான். நீர் கூறியதுபோல நாங்கள் நாய்கள் தான். ஆனால் அந்த நாய்களுக்கு மேசையில் இருந்து கீழே விழும் துண்டுகளைப் பொறுக்கித் தின்ன உரிமையில்லையா? என்று கேட்கிறாள்.*

*இயேசுவின் பதிலைப் பாருங்கள்: அம்மா! உன் விசுவாசம் பெரிது. நீ போகலாம். உன் மகள் குணமாகிவிட்டாள். விவிலியத்தில் உன் விசுவாசம் பெரிது என்று வேறுயாரையும் இயேசு வாழ்த்தியதாக காணவில்லை. இந்த புறவினத்தாளை பற்றித்தான் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.*

*இன்று அதே ஆண்டவர் நம்மைப் பார்த்து எமது பெயரை குறிப்பிட்டு உன் விசுவாசம் பெரிது என்று சொல்வாரா?*

*கடந்த ஞாயிறு முதல் வாசகத்திலே இசையாஸ் கூறியதுபோல, தன்னை மதித்து, தன் உடன்படிக்கையின் மக்களாக வாழ விரும்பும் அனைவரின் காணிக்கைகளையும் செபங்களையும் ஏற்றுக் கொள்வதாக வாசிக்கின்றோம்.*

*பரிசுத்த ஆவியானவர் செயல் பட வரையறைகள் இல்லை என்பது ஆணித்தரமாகத் தரப்படுகிறது.*

*எனவே நம்மில் ஒருவகையான தற்பெருமையில் தோன்றும் திருப்தி நம் விசுவாசத்தை ஆழப்படுத்தாமல் விடலாம். அது வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகக்கூட இருக்கலாம்.*

*எப்படி பரிசேயர் தாங்களே கடவுளின் மக்கள், தங்களுக்கே கடவுள் சொந்தம், வான் வீடும் அவர்களது பட்டா பூமி என்று கருதியது போல நம்மிலே அந்த உணர்வுகள் தோன்றலாம். அதனால் நாமே மிக நல்லவர் நாமே எல்லாம் தெரிந்தவர் நாமே வேதத்தை அனுசரிப்பவர் என்ற சிந்தனை மேலோங்கி ஆவியானவர் நம்மிலே செயல்பட நாம் தடையாக இருக்கலாம்.*

*ஆண்டவர் நமக்குத் தரும் செய்தி, பிறவினத்தாரின் விசுவாசம் அவர்களின் காணிக்கை அவர்களது பரிகார முயற்சி, உடன்படிக்கை செபம் போன்றவை, உன் பக்தி முயற்சிகளைவிட உயர்ந்த நிலையில் இருக்கும் என்பதை கற்றுக்கொள்ளத் தவறாதே என்பதாகும்.*

*இந்த கனானேயப் பெண்ணைப் போல என்னை நெருங்கி வா, விலகி விடாதே. நீயும் நிறைவு பெறுவாய் எனக் கூறுகிறார். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை (லூக். 1:37). விசுவாசத்தால் எல்லாம் கூடும் (மாற்கு 9:23).*


**அருட்பணி முனைவர் அருள்**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

### குறள் தரும் சிந்தனை



சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு

பெரியோரைப் போற்றி ஏற்றுக்கொள்ளும் நோக்கம், அறிவிற் சிறியோரின் உணர்ச்சியில் ஒன்றியிருப்பதில்லை.

# உஷ்ணம் அதிகரிப்பதால் மிகுந்த அவதானம் தேவை!

நாட்டில் கடும் உஷ்ணமான காலநிலை நிலவிக் கொண்டிருக்கும் சூழலில் குளங்கள், நீரத்தேக்கங்கள், நீரேந்து பிரதேசங்கள் என்பவற்றின் நீர்மட்டம் நாளாந்தம் குறைவடைந்து வருகின்றது. அதன் விளைவாக மக்கள் உள்ளிட்ட எல்லா உயிரினங்களும் பல்வேறு விதமான அசௌகரியங்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வரட்சிக் காலநிலையால் நாட்டில் 15 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையம், 52 பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டுள்ள மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளது.

தண்ணீர் என்பது மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களின் இருப்புக்கும் உயிர்வாழ்வுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். அதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் மனிதன் உணர வேண்டிய நிலையை தற்போதைய வரட்சிக் காலநிலை ஏற்படுத்தி இருக்கின்றது.

இவ்வரட்சிக் காலநிலையினால் குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கான நெருக்கடி மாத்திரமல்லாமல் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவிலான நெற்செய்கைகளும் ஏனைய பயிர்ச்செய்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சில பிரதேசங்களில் தென்னை மரங்கள் கூட நீரின்றி அழிவடையக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல், ஊவா மாகாணங்களும் ஹம்பாந்தோட்டை மாவட்டமும் இவ்வரட்சி காலநிலையின் பாதிப்புக்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளன.

இவ்வரட்சிக் காலநிலையும் கடும் உஷ்ணமும் இன்று முடிவுக்கு வராதா? நாளை வராதா? என மக்களே ஏங்கிக் கொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருகின்றது. இவ்வாறான சூழலில் வளிமண்டலவியல் திணைக்களம், நேற்று பிற்பகல் முதல் அடுத்துவரும் 24 மணித்தியாலங்களுக்கு கடும் உஷ்ணக் காலநிலை குறித்த முன்னெச்சரிக்கையை விடுத்திருக்கின்றது.

ஏற்கனவே வாட்டிவதைக்கும் உஷ்ண காலநிலை நிலவிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் கடும் உஷ்ண காலநிலை முன்னெச்சரிக்கை என்பது, தற்போதைய நிலையை விடவும் அதிக வெப்பநிலை ஏற்படப் போவதையே இந்த முன்னெச்சரிக்கை எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள இந்த முன்னெச்சரிக்கையை சாதாரணமாக எடுத்துக்கொள்ளவும் முடியாது. இந்த எச்சரிக்கையின்படி வடக்கு, கிழக்கு, வடமத்தி, ஊவா மாகாணங்களைச் சேர்ந்த மக்களும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் கடும் உஷ்ண காலநிலை குறித்த முன்னெச்சரிக்கையுடனும் மிகுந்த அவதானத்துடனுடனும் நடந்து கொள்ள வேண்டும். இது தொடர்பில் கவனயீனமாகவோ அலட்சியமாகவோ நடந்து கொள்ளக்கூடாது. தவறும் பட்சத்தில் ஆரோக்கிய ரீதியில் பலவிதமான தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுக்கக்கூடிய துரதிர்ஷ்ட நிலைமை கூட ஏற்படலாம்.

அதாவது அதிக வியர்வையுடன் உடலில் நீரிழப்பு ஏற்படும். அதனால் அதிக உஷ்ணம் நிலவும் காலப் பகுதியில் ஒவ்வொருவரும் தினமும் போதியளவு நீரைப் பருக வேண்டும். இது மிகவும் இன்றியமையாதது என்பதுதான் மருத்துவர்களின் அபிப்பிராயமாகும்.

அதேநேரம் உடலில் ஏற்படும் நீரிழப்பை ஈடு செய்யும் வகையில் போதியளவு நீரைப் பருகத் தவறினால் உடலின் உள்ளுறுப்புகளின் செயற்பாடுகளிலும் பாதிப்புகள் ஏற்படலாம். குறிப்பாக தசைப் பிறழ்வு, அதிக களைப்பு என்பனவும் ஏற்படலாம். அத்தோடு தொடர்ந்தும் கடும் உடல் உழைப்பில் ஈடுபடும் போது உடலின் வெப்பநிலை ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளில் நெருக்கடிகள் ஏற்பட்டு heat stroke இற்கு உள்ளாகக் கூடிய அச்சுறுத்தலும் அதிகமாகும்.

மேலும் இக்காலப்பகுதியில் முதியவர்கள் மற்றும் நோயாளர்களின் நலன்கள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தத் தவறக்கூடாது என்று வலியுறுத்தியுள்ள வளிமண்டலவியல் திணைக்களம் கடும் உடலுழைப்பில் ஈடுபடுவதையும் குறைத்துக் கொள்வதோடு, பகல் வேளையை நிழலுடன் கூடிய இடங்களில் கூடுதலாகக் கழிக்குமாறும் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. அத்தோடு வெள்ளை மற்றும் வெளிறிய நிறங்கொண்ட சாதாரண ஆடைகளை அணியுமாறும் சிபாரிசு செய்துள்ளது அத்திணைக்களம்.

இவைஇவ்வாறிருக்க, தற்போதைய கடும் உஷ்ணகாலநிலை தோல் புற்றுநோய்களுக்குக் கூட வித்திடலாம். அதனால் முற்பகல் 10.00 முதல் பிற்பகல் 2.00 மணி வரை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ள தோல் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் நயனி மதரசிங்க, அவ்வாறு செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுமாயின் தொப்பி, குடையைப் பயன்படுத்துமாறும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே கடும் உஷ்ணகாலநிலையின் விளைவாக ஏற்படக்கூடிய தாக்கங்களையும் பாதிப்புக்களையும் தவிர்த்துக்கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவே ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானதாகும்.

editor.tkn@lakehouse.lk

# நல்லூர்க் கந்தன் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பம்



'சார்ந்தாருக்குச் சாகாவரம் கொடுக்கும் நல்லூரரை வீழ்ந்தெழுந்து கும்பிடுவோம் விரைந்து' என அழகாக அருளோடு பாடித்தந்தவர் யோகர்சுவாமிகள் ஆவார்.

யாழ் நகருக்கோர் அணிகலனாக அருட்கலசமாக, அமைந்துள்ளது நல்லூர். நல்லைக் கந்தனின் அருட்சாந்து அருளோடு கலந்து வீசும் நல்லூர் ஆலய காண்டாமணி, அவ்வப்போது ஒலித்தெழும்பும் நாத ஓசை,

யாழ்நகர் எங்கும் ஒலிக்கும் நல்லூர் வானளாவிய அழகு கோபுரங்கள், உயர்ந்து நின்று மெய்யடியார்களை வரவேற்கும் நல்லூர் வடபால் சித்தர்களான செல்லப்பா சுவாமிகளும், யோகர்சுவாமிகளும் அருள் உலா வந்த வந்த நல்லூர்.

எமது நாட்டை ஆட்சிபுரிந்த அந்நியரிடமிருந்து சைவத்தையும். தமிழையும் கட்டிக் காத்து, சைவப்பணியும்.தமிழ்ப்பணியும் ஆற்றிய ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த ஊர் நல்லூர் ஆகும்.

இத்தகைய சிறப்புக்கள் ஏராளம் கொண்ட நல்லையம்பதியின் மகுடமாக விளங்குவது, அங்கு அருள் ஒளி பரப்பி நிற்கும் நல்லைக் கந்தன் ஆலயம். யாழ்மக்களின் இதயம் போன்றது இவ்வாலயம். நல்லைக் கந்தன் ஆலயம் என்றதும் எம்மனக் கண்முன் தோன்றுவன ஆலயத்தின் வனப்புறு கோபுரங்களும், இனிய நாதம் எழுப்பும் ஆலய மணிக்கோபுரமும், வைரப்பெருமானின் ஆலய முன்றலில் தண்ணிழல் பரப்பி நிற்கும் பசுமை நிறைந்த வேப்ப மரமும் ஆகும். எம் மனக்கண் முன் தோன்றி நிற்கும் இவை முருக பக்தர்களைத் தம்பால் ஈர்க்கும்.

இவை மாத்திரமா! உற்சவ காலத்திலே மஞ்சள் ஒளி வீசி வீதியிலே பவனி வரும் மஞ்சரதமும், அசையும் தங்கக் கோபுரம் போல் தங்க ஒளி வீசி வரும், தங்கரதமும், வீணைக்கொடியோன் கைலைமலையைப் பெயர்க்க முயன்ற அரிய காட்சியைச் சித்தரிக்கும் கைலாய வாகனமும் என்றெல்லாம் பல அற்புதங்கள் அங்கு உள்ளன.

கண்ணைக் கவரும் கார்த்திகேயனின் பூஞ்சப்பறமும் அழகு மிகுந்தது. அது தேர் உற்சவத்தின் முதல்நாள் பரந்து உயர்ந்து வீதியை நிறைத்து அசைந்து வருவதே அழகு. சின்னஞ்சிறு மணிகள் அசைந்தாடி ஒலிக்க,அதன் வண்ணத் திருத்தொங்கல்கள் காற்றில் அசைய இனிய நாதஸ்வர ஓசை காற்றில் மிதந்து வர கொடி,குடை, ஆலவட்டம் முன் செல்ல காவடி சுமப்போரும் கற்பூரச்சட்டி எடுப்போருமாக முருகனடியார்கள் பின் செல்ல ஐயனுக்கு பாமாலை சூட்டும் முகமாக பஜனைக் கோஷ்டியினர் ஒருபுறம் காணப்படுவர். கந்தப் பெருமானை நெஞ்சில் சுமந்து வண்ணம் அடி அளிக்கும் பெண்ணடியார்களும் அவர்களைத் தொடர்ந்து அங்கப் பிரதட்சணம் செய்யும் ஆண் அடியார்களும் எங்கும் சூழ நிற்பர்.

ஆறுமுகப் பெருமான் ஷண்முகனாக, அழகு மணித்தேரில் எழுந்தருளும் தேர் உலாக்காட்சியும் காணக் கண்கோடி வேண்டும். இவ்வரிய காட்சியின் வர்ணனை வார்த்தைகளில் அடங்காதது.

இவ்வாலய வருடாந்த உற்சவம் ஆடி அமாவாசையிலிருந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இரதோற்சவத்தைத் தொடர்ந்து பஞ்ச கிருத்தியத்தில் அருளலைக் குறிக்கும் தீர்தோற்சவம் இடம் பெற்று மறுநாள் திருமணத் திருவிழாவான பூங்காவனத் திருவிழாவோடு இனிது நிறைவு பெறுகின்றது. மறுநாள் வைரவப் பெருமான் முன்றிலில் வைரவமடையும் கோலாகலமாக எண்ணற்ற அடியார் மத்தியில் இடம்பெறுதல் மரபு. இவ்விடத்தில் இரதோற்சவம் என்றழைக்கப் பெறும் தேர்த் திருவிழாவின் தத்துவத்தை நோக்குவோம். புராண வரலாற்றின்படி, ஒருகாலத்தில் சூரிய சந்திரர்களைச் சக்கரங்களாகவும், நான்மறைகளைக் குதிரைகளாகவும், மேரு மலையை வில்லாகவும், விஷ்ணு பகவானை அம்பாகவும், பிரம்மாவை சாரதியாகவும், பிரணவத்தைச் சவுக்காகவும் கொண்டு எம்பெருமான் எழுந்தருளி தன் புன்முறுவல் ஒன்றாலேயே முப்புரங்களை எரித்தருளிய 'திரிபுர சம்ஹாரத்தை' மும்மலங்களைக் கெடுத்தொழிக்கும் உண்மையை இந்த இரதோற்சவம் உணர்த்தி நிற்கின்றது. தேர்த்திருவிழாவின் முடிவில் ஆறுமுகப் பெருமான் ஆலயத்துள் திரும்பும் காட்சி, பசுமையாகவும், நம்மியாகவும் அமைந்திருக்கும். பச்சை நிறம், திருக்குடை, திருமாலைகள், அத்தனையும் பச்சை வண்ணமாக பசுமை ஒளி வீசி நிற்கும். இப்பச்சை சாற்றும் வைபவம் ஒரு தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. அதாவது சகல நன்மைகளையும் பெற்றுய்ய வேண்டும் என்னும் உண்மையை இப்பச்சை சாற்றும் வைபவம் காட்டி நிற்கின்றது. இவ்வாலய உற்சவத்தின் பூங்காவனத் திருவிழா நிறைவு விழாவாக, ஆலய நந்தவனத்தில் திருக்கல்யாண வைபவமாக இடம்பெற்று முத்துக் குமார சுவாமி, வள்ளி தெய்வானை சமேதராய், மணவாளக் கோலம் பூண்டு வீதிஉலா வரும் காட்சி நல்லூரரையே பூலோக கைலாயமாக்கி விடும். இம் மங்கல விழாவோடு நல்லைக் கந்தனின் வருடாந்த உற்சவம் இனிது நிறைவு பெறும்.



– கலாபூஷணம்
திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குரு – M A

# யாழ்ப்பாணத்தில் 'இனிய நந்தவனம்' இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு









தமிழ்நாட்டின் திருச்சியில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'இனிய நந்தவனம்' இதழானது வெள்ளிவிழா கண்ட தமிழ் இதழாகும். தமிழர்கள் வாழும் நாடுகளுக்கெல்லாம் அனுப்பப்படும் இந்த இதழானது நாடுகள், பிரதேசங்கள், ஊர்கள், முக்கிய தினங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அநேக சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணச் சிறப்பிதழை வெளியீடு செய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இலங்கைச் சிறப்பிதழ் வெளியாகி இருக்கின்றது. இலங்கைச் சிறப்பிதழின் யாழ்ப்பாணம் அறிமுக நிகழ்வானது 'இனிய நந்தவனம்' இதழின் இலங்கை தொடர்பாளர் எழுத்தாளர் யாழ். பாவாணன் தலைமையில் 19.08. 2023 சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு யாழ் பொதுசன நூலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம பங்கேற்பாளராக 'இனிய நந்தவனம்' இதழின் ஆசிரியர் த.சந்திரசேகரன் பங்கேற்றார்.

நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர் மாதகல் மயூரன் தொகுத்து வழங்கினார். தமிழ் மொழி வாழ்த்தை யாழ்.மாதகல் சென் யோசேப்பு மகாவித்தியாலய மாணவர்கள் இசைத்தனர். வரவேற்புரையை யோ. புரட்சி வழங்கினார். வாழ்த்துரையை இலக்கிய விருது பெற்ற படைப்பாளர் ஓய்வுநிலை அதிபர் ஆ.கனகரத்தினம் வழங்கினார். இலங்கை இதழின் அறிமுக உரையை எழுத்தாளர் லதா கந்தையா நிகழ்த்தினார். 'செத்த வீடு' சிறுகதை உள்ளிட்ட அனைத்து கதைகளின் பட்டியலை வழங்கிய லதா தந்தையா, இதழில் இடம்பெற்றுள்ள படைப்புகள் குறித்து விளக்கங்களையும் அளித்தார்.

இதழ் பற்றிய மதிப்பீட்டு உரையை யாழ் பல்கலைக்கழக தமிழ்(சிறப்பு) பட்டதாரி டயானா நியூட்டன் நிகழ்த்தினார். அட்டைப்பட அமைப்பு முதலாக கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல்கள் உள்ளிட்ட ஒவ்வொரு அம்சங்களின் மதிப்பீட்டுரையை வழங்கினார் டயானா நியூட்டன் அவர்கள். நிகழ்வில் இதழ் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன், இலங்கை தொடர்பாளர் யாழ் பாவாணன் ஆகியோர் மதிப்பளிப்புச் செய்யப்பட்டனர். நன்றியுரையை காசி ஜீவலிங்கமும், ஏற்புரையினை 'இனிய நந்தவனம்' ஆசிரியர் சந்திரசேகரன் வழங்கினர். சிற்றிதழ் தொடரான வெளிவருதலில் பொருளாதாரம் என்பது முக்கிய பங்கு வகிப்பதனையும், பொருளாதாரத்திற்காக இலக்கியத்தை தள்ளி வைக்கவில்லை என்பதையும் இரண்டையும் சமமாக இனிய நந்தவனம் கொண்டு செல்வதனால்தான் 25 ஆண்டுகளை கடந்து இயங்குகிறது' என்பதையும் சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இலக்கிய விரும்பிகளும் இலக்கியப் படைப்பாளர்களும் பங்கேற்ற சிறப்பான நிகழ்வாக அந்நிகழ்வு அமைந்திருந்தது.

# வித்துவான் க.ந.வேலன் நூற்றாண்டு விழா

வடபுலத்தின் ஆழ்ந்தகன்ற தமிழ்ப் புலமைமரபின் நீட்சியாக வித்துவான் க.ந. வேலன் (1923_2003) நிலைபெறுகிறார். சுன்னாகம் ஊரெழுவில் கதிர்காமர் நல்லதம்பிக்கும் செல்லாச்சிப்பிள்ளைக்கும் மகனாய்ப் பிறந்த இரத்தினவேல் பின்னாளில் தன்னை வேலன் என்று அறிவித்தார்.

வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் கொழும்பு தூய பெனடிக்ற் கல்லூரியிலும் வேலன் பயின்றிருக்கிறார். இளமையில் தந்தையை இழந்த வேலன் நெஞ்சில், இளமையிலிருந்தே தமிழ் இலக்கியத்தை, இலக்கணத்தை கசடறக் கற்க வேண்டும் என்ற வேணவா ஆழ வேரூன்றியிருந்திருக்கிறது.

தமிழ் மொழியின் அருமைபெருமையினைக் கண்ணெனப் போற்றும் பெருந்தகையாளராகப் பொலிந்தார். மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் யாழ். ஸ்டான்லிக் கல்லூரியிலும் தமிழாசிரியராகக் கால் நூற்றாண்டிற்குமேல் பணியாற்றிய பேராசானாக வேலன் சிறப்புப் பெற்றவர்.

இலங்கையில் கம்பன் கழகத்தின் தூண்களில் ஒருவராகத் திகழ்ந்து, கம்பனின் புகழ் பரப்பும் அறிஞராக அவர் திகழ்ந்தார். பாரதியின் கவிதைகளை, பாரதியின் கவித்துவத்தை யாழ் மண்ணில் பதியமிட்டவர் வேலன். மேடைதோறும் பாரதியை முழக்கமிட்டவர் அவர். பாரதியின் புகழ் பரப்பிய பெருந்தகை அவராவார்.

பழந்தமிழ்ப் பாரம்பரியத்தில் தோய்ந்த வேலன் தேர்ந்த சைவச் சித்தாந்தியாகத் திகழ்ந்தார். வேலன் எழுதிய 'கண்ணகி சிந்தாத கண்ணீர்' என்ற இலக்கியநூல் அவர் சிலப்பதிகாரத்தில் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், அப்பெருங் காப்பியத்தைப் புதிய கோணத்தில் அணுகும் அவரின் இலக்கியச் செழுமையையும் தெளிவுபடுத்துகிறது.

வேலன் எழுதிய 'எனது காமத்துப் பால்' காமம் குறித்த தனித்துவம் வாய்ந்த நூலெனத் துணியலாம். 'வருக, தமிழர் பொற்காலம்' என்ற நூல் வேலனின் கவிதைத் தொகுப்பாகும். அவர் வாழ்ந்த காலத்திலேயே வேலனின் பதின்மூன்று நூல்கள் வெளியாகியிருந்தன. லண்டனில் அவர் வாழ்ந்த காலப்பகுதியில் தமிழ் இலக்கியம் குறித்த ஐயங்களுக்கு விளக்கம்தர வல்ல ஒரேயொரு தமிழ் அறிஞராக அவர் திகழ்ந்தார். ஈழத்து அரசியல் அவதானியாக க.ந.வேலன் அவர்கள் ஆக்கிய 'ஈழத் தமிழர் யார்?' (2000) என்ற அரசியல் நூல் சர்ச்சைக்குரிய நூலாகும்.



– மு. நித்தியானந்தன்

# காத்தான்குடி மில்லத் மகளிர் பாடசாலை பழைய மாணவிகள் ஒன்றுகூடல்



காத்தான்குடி மில்லத் மகளிர் உயர்தரப் பாடசாலையின் நூற்றாண்டை நோக்கிய பயணத்தில் பாடசாலையின் எதிர்கால முன்னேற்றம் குறித்து ஆராயும் பழைய மாணவிகளின் ஒன்றுகூடல் காத்தான்குடி கடற்கரையிலுள்ள தனியார் விடுதி மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ஜெஸீமா முசம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் பாடசாலை அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டது.

கற்றல் அபிவிருத்தி இணைப்பாட விதான அபிவிருத்தி விளையாட்டு அபிவிருத்தி மாணவர்களின் திறன் அபிவிருத்தி பௌதிக வள அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டு எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாக குழுக்களின் மூலம் முன்மொழியப்பட்டது. இந்த ஒன்றுகூடலில் பாடசாலை பழைய மாணவிகள் சங்கத்தின் செயலாளர் திருமதி சகீலா அப்துர் ரஹ்மான், அதன் உறுப்பினர்கள், பழைய மாணவிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# கிழக்கின் குரல்



# ஒலுவில் துறைமுகத்தை செயற்படுத்தி கிழக்கு கடலுணவுகளை பெறத் திட்டம்

## அதிகாரிகளுடனான சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ்

கிழக்கு கடற் பரப்பில் ஏராளமான கடலுணவு சார்ந்த வளங்கள் காணப்படுகின்ற போதிலும், இதுவரையில் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாதுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஒலுவில் துறைமுக செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக,அதிகாரிகளுடன் நேற்று (21) நடத்தப்பட்ட கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:கிழக்கு கடற்பரப்பில் ஏராளமான கடலுணவுகள் காணப்படுகின்றன. ஒலுவில் துறைமுகத்தை சரியாகப் பயன்படுத்தினால்,இந்த உணவுகளைப் பெற முடியும்.

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதால், அயல் கிராமங்களில் கடலரிப்பு அதிகரித்துள்ளதாகவும், துறைமுகத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுமாயின், கடலரிப்பு வேகம் மேலும் அதிகரிக்கலாம் எனவும் சில தரப்புக்களினால் அச்சம் வெளியிடப்படுகிறது. இவ்விடயம் குறித்து ஆய்வு ரீதியான அறிக்கைகள் பெறப்படவுள்ளன. இந்த அறிக்கைகளின் அடிப்படையிலே அடுத்த கட்ட வேலைகள் ஒழுங்குபடுத்தப்படும். இது குறித்த அச்சங்கள் பிரதேச மக்களுக்கு தெளிவுபடுத்தப்படுவது அவசியம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



# திருமலையில் இனிய நந்தவனம் சிறப்பிதழ் சஞ்சிகை வெளியீடு



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

வாசல் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் இனிய நந்தவனம் சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழ் (20) ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டது. திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் ஞாயிறு மாலை இந்நிகழ்வு இடம்பெற்றது. வாசல் வாசகர் வட்டத் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமை யில், இந்நிகழ்வு இடம்பெற்றது . வாசல் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ச.திருச்செந்தூரன், கவிஞர் க.யோகானந்தம், கவிஞர் தில்லைநாதன் பவித்ரன் உள்ளிட்டோர் இதில், உரையாற்றியிருந்தனர்.

# இரத்தான நிகழ்வு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்தின் 140 ஆவது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினர் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு, (20) ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

பழைய மாணவர் சங்கத் தலைவரும் பாடசாலை அதிபருமாகிய க.அரசரெத்தினம் தலைமையில், நடைபெற்ற இவ்விரத்ததான நிகழ்வில், பாடசாலையின் பழைய மாணவர்கள் பலர் பங்கேற்று இரத்தம் வழங்கினர்.மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவிற்கு இரத்தம் அனுப்பி வைக்கப்பட்டது.

# அட்டாளைச்சேனை பாத்திமா மகளிர் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)




அட்டாளைச்சேனை பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா அண்மையில், கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழா,தென்கிழக்கு பல்கலைக்கழக கணினி விஞ்ஞான சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.ஹனீஸ் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு ஸம், ஸம் பௌண்டேசன் தலைவர் அஷ்ஷேய்க் எம்.எச்.எம்.யூசுப் முஃப்தி,பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாணவியருக் கான பட்டங்களை, பொது வைத்திய நிபுணர் டாக்டர் ஆபீதா கையூம் வழி நடத்தலின் கீழ், உதவி பிரதேச செயலாளர் நஜீஹா முஸாபீர், டொக்டர் பறுசா நக்பர், டொக்டர் தஹானா அனீஸ் உட்பட கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் வழங்கி வைத்தனர்.2018 முதல் 2022 வரையான காலப்பகுதியில் 68 பேர், பட்டங்களைப் பெற்று இங்கிருந்து வெளியேறினர்.

38 முஅல்லிமாக்களும், 30 ஹாபிழாக்களும் இதன்போது பட்டங்கள் வழங்கப்பட்டன.கல்லூரியின் ஊழியர்கள் மற்றும் பிரதம அதிதி ஆகியோர்களுக்கும் சின்னங்கள் வழங்கப்பட்டன. இம்மகளிர் அரபுக்கல்லூரி 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

# திருமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடம் அங்குரார்ப்பணம்






திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு அண்மையில் (18) இடம்பெற்றது.திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டதையடுத்தே, இப்பீடம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச.தேவதாசன், கிழக்கு மாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், சித்த மருத்துவ பீடத்தின், பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ.சுதர்சன் மற்றும் விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது,சித்த மருத்துவத்தின் தந்தையாகவுள்ள அகஸ்த்திய முனிவரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, சர்வமத அனுஷ்டானங்களுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது.

# அம்பாறை மாவட்ட நூலகர்களின் வினைத்திறனை மேம்படுத்த செயலமர்வு

(இறக்காமம் தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வேறு நிறுவனங்களிலும் சேவையாற்றும் நூலகர்களின் வினைத்திறனை மேம்படுத்தும் வகையில்,ஒரு நாள் பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டது."ஆராய்ச்சி ஆற்றலுடன் நூலகங்களை மேம்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் நடாத்தப்பட்ட இச்செயலமர்வை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

பல்கலைக்கழகத்தின் அஷ்ரப் ஞாபகார்த்த நூலக கேட்போர் கூடத்தில் (19) இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு



தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.ரிபாயுடீன் தலைமை தாங்கியதுடன்,பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.இதன்போது, உள்ளூராட்சி மன்ற நூலகங்கள்,பாடசாலை நூலகங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் உள்ள 40 நூலகங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி எம்.எம்.மஸ்றூபா, தென்னிந்தியாவை சேர்ந்த பாரதிதாசன், பல்கலைக்கழக நூலக தகவல் விஞ்ஞான பிரிவின் பொறுப்பாளர் கலாநிதி ஆர். பாலசுப்பிரமணி மற்றும் இலங்கை பேராதனை பல்கலைக்கழக நூலகர் மகேஸ்வரன் ஆகியேரும் கலந்து கொண்டனர்.

# அல்ஹம்றா மாணவர்கள் விஷேட கல்விச் சுற்றுலா

(தோப்பூர் குறூப் நிருபர்)

தோப்பூர் கோட்டத்திற்குட்பட்ட தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் தரம் 10 மற்றும் தரம் 12 மாணவர்கள் மூன்று நாள் கல்விச் சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.கண்டி, நுவரெலியா மற்றும் கொழும்பு மாவட்டத்தின் முக்கிய இடங்களை இவர்கள் பார்வையிட்டனர்.

கண்டி மாவட்டத்தின் தலதாமாளிகை, நூதனசாலை, பேராதனை தாவரவியற் பூங்கா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றை பார்வையிட்டு இம்மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். இரண்டாம் நாள் நுவரெலியா மாவட்டத்தில் ரம்பொட நீர்வீழ்ச்சி, ஹக்கல தாவரவியற் பூங்கா, அம்பேவெல பண்ணை மற்றும் முக்கிய இடங்களையும் இவர்கள் பார்வையிட்டனர். மூன்றாம் நாள் கொழும்பு மாவட்டத்தில் நூதனசாலை, மிருகக்காட்சி சாலை, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபம், காலிமுகத்திடல், தாமரை கோபுரம் மற்றும் முக்கிய இடங்களுக்கும் இம்மாணவர்கள் விஜயம் மேற்கொண்டனர்.

# வாராந்த சந்தைகளை அகற்றுமாறு நேற்று ஆர்ப்பாட்டம்

(கல்குடா தினகரன் நிருபர்)

வாராந்த சந்தைகளை இடைநிறுத்துமாறு கோரி நேற்று (21) கல்குடாத் தொகுதி வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்றனர். வாழைச்சேனை, ஓட்டமாவடி, மாவடிச்சேனை, செம்மண்ணோடை, பிறைந்துரைச்சேனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள்,இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர்கள் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் ஆகியோரிடத்தில் இதுகுறித்த மகஜர்களையும் இவர்கள் கையளித்தனர்.வாராந்த சந்தைகள் அதிகரித்துள்ளதால் தங்களது வர்த்தக நிலையங்களின் வருமானம் குறைந்துள்ளதாகவும்,வரியுட்பட பிரதேசத்தின் சகல விடயங்களிலும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் உதவும் தங்களது வியாபார விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறும் இவர்கள் வேண்டிக் கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஆறாவது வருடாந்த மாநாடு




(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் ஆறாவது வருடாந்த மாநாடு, அமைப்பின் தலைவர் கலாபூசணம் எம்.ஏ.பகுர்தீன் தலைமையில் நடைபெற்றது. அக்கரைப்பற்று எயிம்ஸ் சர்வதேச பாடசாலை கேட்போர் கூடத்தில் நேற்று (20) சனிக்கிழமை இடம்பெற்ற இம்மாநாட்டில், ஊடகவியலாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெற்றது.

இலங்கை இராணுவத்தின் 24 படைப்பிரிவின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்ரசிறி, தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக இதில், கலந்து கொண்டனர்.

போரத்தின் உறுப்பினர்கள் கடந்த காலங்களில் ஊடகத்துறைக்கு வழங்கிய பங்களிப்புக்காக அதிதிகளால் நினைவுச் சின்னம் வழங்கிப் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

**போக்குவரத்து மற்றும் அதிவேகநெடுஞ்சாலைகள் அமைச்சு**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்த இலக்கம் | வாகன இனம் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அதிவேக நெடுஞ்சாலைகள் இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக பயணிகள் வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் வாகனங்களின் பராமரித்தல் | RDA/EOM&M/PRC/2023/MECH/22 | கார் - 03<br>8 ஆசனமுள்ள வேன் - 05<br>குழுவினர்க்கான கெப் - 02 |
| | RDA/EOM&M/PRC/2023/MNT/13 | தொழிலாளர்களை அழைத்துச் செல்லும் ட்ரக் - 01<br>சமிக்ஞை அட்டை எடுத்துச் செல்லும் ட்ரக் 02 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள ஒப்பந்தங்களுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.08.22 ஆம் திகதியிலிருந்து 2023.09.06 ஆம் திகதி வரையும் வீஅஅ மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் அமைச்சின் **www.rda.gov.lk** என்ற இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**EOM&M பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் (EOM&M பிரிவு) மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

## அவிசாவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

அவிசாவளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்தில் பு னருத்தாரன பணிகள் ஆரம்பமாக வுள்ளதால் இன்றைய தினம் பாலாலய மகா கும்பா பிஷேகம் நடைபெறவுள்ளது.

நேற்று ஆரம்பமாகிய கிரியைகள் இன்று பூர்த்தி யடைந்து பாலஸ்தாபனம் நடத்தப்படும். மல்லாவி சிவ ஸ்ரீ குமாரபிரபாகர குருக்கள், முத்துமாரியம்மன் ஆலய கேசவசதீஸ்வர குருக்கள் பாலஸ்தான கிரியை களை மேற் கொள்வார்கள்.

இப்புண்ணிய கைங்கரியம் அடுத்த வருடம் வைகா சியில் நிறைவு செய்யப்படும் என்றும் இக் காரியத் துக்கு சைவ அடியார்கள் பொருள், பண மற்றும் சரீர உதவிகளை வழங்குமாறும் ஆலய நிர்வாக சபை கேட்டுக் கொண்டுள்ளது. கிரியைகள் நடக்கும் இன்று அன்னதானமும் வழங்கப்படும்.

## ஒலி, ஒளி ஊடகர் விக்னேஸ்வரனின் "நினைவு நல்லது" நூல் வெளியீடு



ஒலி, ஒளி ஊடகர் P. விக் னேஸ்வரனின் ஐம்பதாண் டுகளுக்கும் மேலான அனு பவப் பகிர்வைக் கொண்ட நினைவு நல்லது என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 2023.08.29ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண பல்க லைக்கழகத்தின் நூலகக் கேட் போர்கூடத்தில் இடம்பெறவுள் ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறை தலைவர் பூங் குழலி சிறிசங்கீர்த்தனன் வரவேற்புரை நிகழ்த்த, யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் தலைமையுரை ஆற்று வார். சிரேஷ்ட ஊடகவியலா ளர் கணபதி சர்வானந்தா அறி முகவுரை ஆற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் வாழ்த் துரை வழங்குவார். அரசியல் ஆய்வாளர் நிஸாந்தன் ஆய்வுரை நிகழ்த்த, இலங்கை ரூபவாஹி னிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவின் முன்னைநாள் பணிப்பாளர் எஸ். விஸ்வ நாதன் நயப்புரை வழங்குவார். ஊடகக் கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையா ளர் டினேஷ் கொடுதோர் நன்றியுரை ஆற் றுவார்.

# யுனெஸ்கோ பதவிக்கு தகுதியற்ற ஒருவர் முன்னாள் பாக். பிரதமரால் நியமனம்

## திறனற்றவர்கள் பதவிக்கு நியமனம் என குற்றச்சாட்டு

தற்போது பதவி விலகியுள்ள முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், தகைமையற்ற ஒருவரை தனது விருப்பப்படி யுனொஸ்கோவின் புதிய உதவி நிரந்தரப் பிர திநிதியாக நியமனம் செய்துள்ளார் என்றும் போட்டித் தேர்வில் தோல்வியடைந்த இவ ருக்கு தான் பதவி விலகுவதற்கு ஒரு நாள் இருக்கையிலேயே இந் நியமனத்தை வழங் கினார் என்றும் ஊடகங்கள் குற்றம் சுமத்தி யுள்ளன.

இப்பதவி நியமனத்துக்கு 56 விண்ணப் பங்கள் கிடைக்கப் பெற்றதாகவும் இவர்க ளில் 42 பேர் தெரிவு செய்யப்பட்டு எழுத் துமூலத் தேர்வுக்கு உட்படுத்தப்பட்டதில் 12 பேர் தெரிவானதாக தகவல்கள் தெரிவிக் கின்றன.

இவர்களில் இருந்து ஒருவரை தெரிவு செய்யும் வகையில் கல்வி அமைச்சு மூவரின் பெயர்களை சிபாரிசு செய்து பட்டியலை இறுதி முடிவுக்காக பிரதமருககு சமர்ப்பிக் கப்பட்ட போது, 79.3 மதிப்பெண் பெற் றிருந்தவரைத் தவிர்த்துவிட்டு 62.85 மதிப் பெண்களைப் பெற்று லுப்னா சயித் கியாஸ் என்ற பொருளாதார விவகார அமைச்சு அதி காரியை தேர்வுக்கு தகுதிகளை புறக்கணித்து ஷெபாஸ் ஷெரீப் இப் பதவிக்கு நியமனம் செய்ததாக இக் குற்றச்சாட்டில் இருந்து தெரி யவந்துள்ளது.

1949 முதல் பாகிஸ்தான் யுனெஸ்கோவில் அங்கத்துவம் வகித்து வருகிறது. இக்காலப் பகுதியில் 50 ஆயிரம் டொலர்களை கல்வி, குடிநீர், மகளிர் வசதிகள், பயிற்சி, திறன் அபி விருத்தி போன்ற துறைகளின் மேம்பாட்டுக் காக பாக்.

அரசு பெற்றுக் கொண்டது. இந்த உத விகளை தகுதியானவர்கள் நியமிக்கப்ப டாமையால் முழுமையான பயன்பெற முடியவில்லை என ஊடக தகவல்கள் சுட் டிக்காட்டியுள்ளன.

## கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை

### 2024ஆம் ஆண்டிற்கு இறைச்சிக் கடை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகோரல்

கொடிகாவதத முல்லேரியாவ பிரதேச சபை 2024ஆம் ஆண்டிற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கடை அறைகளில் இறைச்சிக் கடை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ. இல. | இடம் | கேள்விப் படிவக் கட்டணம் ரூ. | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு ரூ. | குறைந்தபட்ச கேள்வி ரூ. |
|---|---|---|---|---|
| 01 | கொத்தட்டுவ மாட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 15,000.00 | 105,000.00 |
| 02 | கொத்தட்டுவ கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 275,000.00 |
| 03 | கொத்தட்டுவ பன்றியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 126,000.00 |
| 04 | கொடிகாவத்த மாட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 20,000.00 | 995,000.00 |
| 05 | கொடிகாவத்த கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 288,000.00 |
| 06 | கொடிகாவத்த புதிய கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 288,000.00 |
| 07 | கொடிகாவத்த ஆட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 165,000.00 |
| 08 | கொடிகாவத்த பன்றியிறைச்சிக் கடை | 3,000.00 | 7.500.00 | 441,000.00 |
| 09 | அங்கொட மாட்டிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 95,000.00 |
| 10 | அங்கொட கோழியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 122,000.00 |
| 11 | அங்கொட பன்றியிறைச்சிக் கடை | 3,000.00 | 5,000.00 | 97,000.00 |

கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2023.08.22 முதல் 2023.09.22 பி.ப. 3.00 வரை இடம்பெறும்.
கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2023.09.25 பி.ப. 2.00 இற்கு முடிவடைவதுடன் அன்றே பி.ப. 2.00 இற்கு கேள்வி விலைமனுப் பத்திரங்கள் திறக்கப்படும்.

**நிபந்தனைகள்:**

01. கேள்விகள் இரு பிரதிகளுடன் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் மூலப்பிரதி ஒரு உறையிலும் இரண்டாம் பிரதி மேலுமொரு உறையிலும் இடப்பட்டு வேறுவேறாக பொறியிட்டு அவ்உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு 'செயலாளர், கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை' பெயரில் பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது சபையின் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடலாம்.
02. கேள்வி விண்ணப்பங்களை அனுப்பும்போது நீங்கள் குத்தகை பெறுவதற்கு உத்தேசிக்கின்ற கடை அறை பற்றிய விபரங்களை கேள்வி விலைமனுக்கள் சமர்ப்பித்தல் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும். கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்வி விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
03. கேள்விப் படிவங்கள் மற்றும் கேள்வி வைப்பு சார்பாக காசோலைகள் காசுக் கட்டலைகள் ஏற்கப்பட மாட்டாது அத்துடன் சகல கட்டணங்களும் காசாக செலுத்தப்படல் வேண்டும். கேள்விப் படிவங்கள் சபையினால் வழங்கப்படுவதுடன் படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும்போது உங்களது தேசிய அடையாள அட்டையை கொண்டுவரல் வேண்டும். மேற்படி கட்டணங்களுக்கு மேலதிகமாக முத்திரைக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
04. அபகீர்த்தியானோர் பட்டியலுக்கு உட்படுத்தப்பட்ட கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் அவர்களது மற்றும் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு விண்ணப்பிக்காத கேள்விதாரர்களின் பணைத் தொகை சபைக்கு உரிய தாக்கப்படும்.

கேள்வி சம்பந்தமான இறுதித் தீர்மானம் கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபைக்கு உரியது.

இது பற்றிய மேலதிக விபரங்களை 2023.09.22 வரை அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கம் ஊடாக அல்லது அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொ.பே. இலக்கம் 011-2410288

**எச்.ஏ.ஏ.எஸ். சிரிவர்தன,**
**அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி/ செயலாளர்,**
**கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை.**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

1. **கடன் தொடர்பு இலக்கம்: 88115164**

   இல. 84/1. பளங்கத்துரே. கொச்சிக்கடை என்ற முகவரியிலுள்ள லங்கா பீச் ஹொட்டல் (தனியார்) நிறுவனத்தின் பணிப்பாளர்களாகிய வர்ணகுலசூரிய பட்டபெந்திகே லூஸி ஜசிந்தா பொன்சேகா என அறியப்படும் திருமதி வர்ணகுலசூரிய பட்டபெந்திகே ஜசிந்தா பொன்சேகா, எனப்படும் வர்ணகுலசூரிய படடபெந்திகே லூஸி ஜசிந்தா பொன்சேகா திரு வர்ணகுலசூரிய தரிந்து ஹேஷான் மாதவ பெனான்டோ, திரு. வர்ணகுலசூரிய திஷித்த நிமாஷ மதுஷான் பெனான்டோ. வர்ணகுலசூரிய ஷவிந்தி திவாங்கி பெனான்டோ என அறியப்படும் திருமதி. ஷவிந்தி திவாங்கி பெனான்டோ ஆகியோரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

2. இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.07.21ஆம் திகதிய 2342ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.07.28ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்கள் 26.09.2023 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**"தல்கஹவத்த"** என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஜே.எம்.ஜி. டயஸ் தயாரித்த 1997.07.07ஆம் திகதிய **2380A/97** என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 7** என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 181/B பொருத்தோட்ட வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடனும் அதன்கன் காணப்படும் மண், மரங்கள். பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம். கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை துன்கஹ பற்று நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 75/A, பளங்கத்துரே மேற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள பளங்கத்துரே கிராமத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** 2380A/97 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 6ஐயும் **கிழக்கில்** பாதையையும் (நெடுஞ்சாலை) **தெற்கில்** 2380A/97 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 8ஐயும் **மேற்கில்** கடற்கரையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணியானது குறித்த 2380A/97 என்ற வரைபடத்தின்படி **பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே15.50)** பரப்பளவைக் கொண்டுள்ளதோடு நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் G32/141 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறித்த 2380A/97 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7 3858A என்ற இலக்கமுடைய அண்மைய வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

**"தல்கஹவத்த"** என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.ஜே.எம்.ஜி. டயஸ் தயாரித்த 2006.01.18ஆம் திகதிய 3858A என்ற இலக்கமுடைய வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 2** என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கன் காணப்படும் அனைத்துடனும் மேற்குறித்தவாறு பளங்கத்துரே கிராமத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** 2380A/97 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 6ஐயும் **கிழக்கில்** பாதையையும் (நெடுஞ்சாலை) **தெற்கில்** 2380A/97 என்ற இலக்கமுடைய வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 8ஐயும் **மேற்கில்** கடற் கரையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணியானது குறித்த 3858A என்ற வரைபடத்திற்கமைய **பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-ரூ0- பே15.50)** பரப்பளவைக் கொண்டுள்ளது.

ஏலவிலை கூறுவோர் மேற்குறித்த ஆதனத்தின் உரிமைத்துவ உறுதியையும் அதனோடு இணைந்த ஆவணங்களையும் நீர்கொழும்பு மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருடன் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிடலாம். **0312222214**

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**திருமதி டி.கே.வி.கே திசாநாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நீர்கொழும்பு மேற்தரக் கிளை**

# ஜம்மு-காஷ்மீரில் சுதந்திர கொண்டாட்டங்கள்

## திரளாகக் கலந்து கொண்ட மாணவர்கள், பொதுமக்கள்

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் இந்தி யாவெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டதைப் போலவே ஜம்மு காஷ்மீரிலும் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் நடத்திய சுதந்திர விழா நிகழ்வுகளில் தேசிய ஒற்றுமை மற்றும் பல்லின சூழலில் ஒருமைப்பாடு என்பன கருப்பொருட்களாக கொள்ளப்பட் டிருந்தன. மேலும் ஒற்றுமை, பாலின சமத்துவம், தேசபக்தி, தேசிய ஒருமைப்பாடு என்பனவற்றை வலியுறுத்தும் வகையில் யூனியன் பிரதேசமெங்கும் கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், போட்டிகள், சொற்பொழிவுகள், கட்டுரைப் போட்டிகள் என்பனவும் நடத்தப் பட்டு வெற்றிபெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டதாகவும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானுக்கு அருகாமையில் அமைந்துள்ள பூன்ச் எல்லை மாவட்டத்திலும் இவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது. முஜாயிதீன் ஆஸாதி போன்ற சுதந்திர போராட்ட வீரர் கள் இவ் வைபவங்களின் போது நினைவு கூரப்பட்டதுடன் வந்தே மாதரம் போன்ற சுதந்திர கீதங்களும் இசைக்கப்பட்டன.

இவ் வைபவங்களில் பொலிஸ், இராணுவ, அரசுதுறை உயர் அதி காரிகளும் ஏராளமான பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்க ளும் திரளாகக் கலந்து கொண்டனர்.

# இந்திய உதவியுடன் அமைக்கப்பட்ட நேபாள பாடசாலை திறப்பு

இந்திய சுதந்திரதின விழாவை முன்னிட்டு, இந்திய உதவியுடன் அமைக்கப்பட்ட புதிய பாடசாலை நேபாள தலைநகரான காத்மண்டு வில் கடந்த 15ஆம் திகதி வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. 13 வகுப்பறைகளையும், நிர்வாக அலுவலகம், வாசிகசாலை, பரிசோ தனைக் கூடம், மண்டபம் என்பனவற்றை உள்ளடக்கிய இரு கட்ட டங்கலான 69 மில்லியன் ரூபா செலவில் இப்பாடசாலை அமைக்கப் பட்டுள்ளது.

நேபாளத்தில் நிகழ்ந்த பூகம்பத்தையடுத்து 50 மில்லியன் டொலர் செலவில் 71 பாடசாலைகளை பூகம்பத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் அமைத்துத் தருவதற்கு இந்தியா முன்வந்தது. அத்திட்டத் தின் கீழ் முதலாவதாக திறந்து வைக்கப்பட்ட பாடசாலையே பிஷ்ணு தேவி இரண்டாம் நிலை பாடசாலையாகும். சிறுவர்கள் மற்றும் மாற் றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வசதிகள் கொண்ட இப்பாடசாலையில் 500 மாணவர்கள் பயில முடியும்.

இந்திய உதவித் திட்டத்தின் கீழ் 65 பாடசாலைக் கட்டடங் கள் அமைக்கப்பட்டு விட்டதாகவும், மேலும் ஆறு கட்டடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு விடும் என்றும் காத்மண்டு இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பாடசாலைக் கல்வி முறையை மேலும் மேம்படுத்தும் நேபாள அரசின் முயற்சிகளுக்கு இந்தியா தன் பங்களிப்பை வழங்கியுள்ளதாக தூதுரகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

# பாதுகாப்பு சேவைகளை வழங்கல்

**கேள்வி இல. 64/2023.09.13**

கொழும்பு-07, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் 24 மணித்தியால பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சின் சிவில் பாதுகாப்பு பிரிவு/பிரதேச செயலகத்துடன் பதிவு பெற்றுள்ள புகழ்வாய்ந்த பாதுகாப்பு கம்பனிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன. அளவீட்டுப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு ஒப்பந்தக்காரர் இராணுவ பின்புலத்தைக் கொண்டுள்ள பாதுகாப்பு அலுவலர்களை வழங்குவதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்கோரலை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் பதிவு செய்தலின் நிழற்படப்பிரதியொன்றுடன் கடிதமொன்றையும் சமர்ப்பித்து 2023.09.12 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் இந்த கூட்டுத்தாபனத்தின் பெறுகைக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து கேள்விப் பத்திரம் மற்றும் ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு தொகுதி கேள்வி ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,500 ரூபா அறவிடப்படும். கேள்வி ஆவணமானது இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

2023.09.13 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் கேள்விகள் இரு பிரதிகளில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம், கொழும்பு-07 என்ற முகவரியை வந்தடைதல் வேண்டும். 2023.09.13 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு பின்னர் உடனடியாகவே கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனம்,**
**கொழும்பு-07.**

# பாம்பு தீண்டி பெண் தொழிலாளி உயிரிழப்பு

## தொழில் பாதுகாப்பை வலியுறுத்தி மக்கள் ஆர்ப்பாட்டம்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பசறை, கோணக்கலை தோட்டத்தில் பாம்பு தீண்டி பெண் தோட் டத்தொழிலாளியொருவர் உயிரிழந்த சம்பவத்துக்கு நீதி கோரியும், தமக்கான தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி யும் தோட்டதொழிலாளர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன், தேயிலை மலைகளிலுள்ள பாம்பு புற்றுகளை அகற்றுமா றும், உயிரிழந்த பெண்ணின் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்க வேண் டுமெனவும் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கோணக்கலை தோட்டத்தின் 5 பிரிவுகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் பங்கேற்றனர். பசறை 10ஆம் கட்டைப் பகுதியில் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தோட்ட வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறும் இதன்போது வலியுறுத்தினர்.

கடந்த 16ஆம் திகதி கோணக்கலை கீழ் பிரிவைச் சேர்ந்த 56 வயது டைய பெண் தொழிலாளி ஒருவர் கொழுந்து பறித்து கொண்டிருந்த வேளை பாம்பு தீண்டியமையால் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் நேற்றுமுன்தினம் மாலை 3 மணி யளவில் கோணக்கலை கீழ் பிரிவு பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## සියපත ෆිනෑන්ස් / சியபத பினான்ஸ் / Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

### மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை மத்தியஸ்தானங்களில் 2023 ஏப்ரல் 30ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கபடாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2023 செப்தம்பர் 07ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

| கிளை / மத்தியஸ்தானம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி - கந்த வீதி, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே, மாத்தளை, தம்புள்ளை, நவம் மாவத்தை, பொலன்னறுவை, கிளிநொச்சி மற்றும் புத்தளம் | 2023 ஏப்ரல் 30ம் திகதிக்கு முன் மீட்கபடாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க
மாவத்தை, கொழும்பு 08

---

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் திருத்தற் பத்திரம்**

**எனது இல. KWDS/LND/01/ACQ/03/2014**
**காணி அமைச்சின்**
**குறிப்பு இல. 4-3/4/2014/LO/230**

காணி எடுத்தற் சட்டத்தின் 07ஆம் பிரிவின் கீழ் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1988/38ஆம் இலக்கமும் 2016.10.14 திகதியுமுடைய அதிவிசேட வர்த்தமானியில் 1Aஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் திகதியானது 2016.11.30 எனவும் நேரம் மு.ப. 10.00 மணி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது 2023.10.23ஆம் திகதி எனவும் நேரம் மு.ப. 10.00 மணி எனவும் திருத்தமாதல் வேண்டும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

**சஞ்ஜீவனீ கன்டம்பி,**
**பிரதேச செயலாளர்,**
**கலவான.**

திகதி: 2023.08.17

The Housewives' companion
Classifieds on
Daily News

---

# அறிவித்தல்

## விலைக்கோரலுக்கான அழைப்பு

## இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

LECO

### கேள்வியின் பெயர்: துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்

**கேள்வி இல. GL/ADM/GEN/PRO/7**

இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தின் காலி கிளை அலுவலக பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வகையில் 2023/2025 வருடங்களுக்காக துப்புரவேற்பாட்டுச் சேவைகளைப் பெற்றுக்கொள்வற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| சேவை இடம் | முகவரி | பணியாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | பெண் | ஆண் |
| கிளை அலுவலகம் - காலி | இல. 182, ரிச்மன்ட் மேடு வீதி, காலி | 03 | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (காலி) | இல. 02, வெகுணாகொட வீதி, காலி | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் (ஹிக்கடுவ) | இல. 48/09, பத்தேகம வீதி, ஹிக்கடுவ | - | 01 |
| பாவனையாளர் சேவை நிலையம் - அம்பலாங்கொட | இல. 48, மகா அம்பலாங்கொட, அம்பலாங்கொட | - | 02 |

01. எதிர்பார்க்கப்படும் சேவைக் காலம் விலைக்கோரல் கையளிக்கப்படும் நாள் முதல் இரண்டு வருடங்களாகும்.
02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறை மூலம் விலைமனுக்கள் கோரப்படும்.
03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை காலி, ரிச்மன்ட் மேடு வீதி, 182ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள காலி கிளை அலுவலகத்தின் மனித வளங்கள் மற்றும் நிர்வாக அதிகாரியிடமிருந்து இன்று முதல் 07 நாட்களுக்குள் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.30 மணி வரை) விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை காலி கிளை அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம். குறித்த கட்டணத்தை காலி கிளை அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
05. விலைமனுக்களை 2023-08-29ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது கிளை அலுவலகத்திற்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் அல்லது தொலைநகல் மூலம் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. விலைக்கோரல்கள் 2023-08-29ஆம் திகதி பி.ப. 3.30 மணிக்கு கிளை அலுவலகத்தின் பெறுகைக் குழுவினால் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
07. விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாள் நீடிக்கப்பட்ட நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (பதில் பொது முகாமையாளர்),**
**இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்,**
**(கிளை அலுவலகம், காலி)**
**இல. 182, ரிச்மன்ட் மேடு வீதி, காலி.**
**0912232216**

---

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**117 வேன்கள் விற்பனைக்கு**

59-8068 NISSAN 1992, GL-2376 NISSAN SERENA 1995, VAN கூடிய விலைக் கோரிக்கை க்கு . வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0714542 958 . 052088

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAT-7293 BAJAJ 2014, AAL-4121 BAJAJ 2013, THREE WHEE L கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 052097

AAV-7503 BAJAJ 2014, THREE W HEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 052081

YY-5458 BAJAJ 2012, YC-9344 BAJAJ 2010, THREE W HEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0705999 163 . 052102

---

### கிரிபாவ பிரதேச சபை

### 2024 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

2024 ஆம் ஆண்டிற்காக கிரிபாவ பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க்காணும் வேலை, பொருட்கள் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக வழங்குநர்கள் பதிவுசெய்யப்படுவர் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்காக பதிவுக்கட்டணம் ரூபா 1000 ஆவதுடன், ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 5000.00 ஆகும் மாதிரி விண்ணப்பத்துடன் விபரப்பத்திரத்தை கிரிபாவ பிரதேச சபை அலுவலகத்தில் அல்லது giribawaps@gmail .com என்ற எமது மின்னஞ்சல் முகவரியில் வேண்டுதல் மேற்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்யும் இறுதித்திகதிக்கு 2023 டிசம்பர் 31 ஆகும்.

| தொடர் இல | உருப்படி | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 01 | அலுவலக உபகரணங்கள் (மரத்தளபாடம்/உருக்கு/பிளாஸ்டிக் பொருட்கள்) | ரூ.1000 |
| 02 | காகிதாதிகள் மற்றும் கடதாசி | ரூ.1000 |
| 03 | வீதி விளக்கு உபகரணம் மற்றும் மின் உபகரணங்கள் | ரூ.1000 |
| 04 | ஹியூம் பைப், சீமெந்து கல் | ரூ.1000 |
| 05 | டயர்/பற்றரி/டியூப் | ரூ.1000 |
| 06 | வாகனம் மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் | ரூ.1000 |
| 07 | கணனி மற்றும் போட்டோப்பிரதி இயந்திரம் | ரூ.1000 |
| 08 | போட்டோப் பிரதி இயந்திரம்/அச்சு இயந்திரம் டோனர் மற்றும் தீந்தை | ரூ.1000 |
| 09 | சகல நிர்மாணப் பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் துணைப்பாகங்கள் | ரூ.1000 |
| 10 | தார்/கோலாஸ் | ரூ.1000 |
| 11 | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினி | ரூ.1000 |
| 12 | மரங்கள் வழங்குதல் (பலகை/தீராந்து/ரீப்பை) | ரூ.1000 |
| 13 | நாய்களின் கழுத்துப்பட்டி | ரூ.1000 |
| 14 | அச்சு சேவைகள் | ரூ.1000 |
| 15 | வாகனம் சேர்விஸ் செய்தல் பழுது பார்த்தல் | ரூ.1000 |
| 16 | கணனி பழுதுபார்த்தல் /வலையமைப்பிற்கு உற்படுதல் | ரூ.1000 |
| 17 | நூலக புத்தகங்கள்/சஞ்சிகைகள்/பத்திரிகைகள் | ரூ.1000 |
| 18 | வளிச்சீராக்கி பழுது பார்த்தல் | ரூ.1000 |
| 19 | Ro நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பழுதுபார்த்தல் | ரூ.1000 |
| 20 | நில அளவை சேவைகள் | ரூ.1000 |
| 21 | CCTV கெமரா அமைப்பு பொருத்துதல் மற்றும் சேர்விஸ் செய்தல் | ரூ.1000 |
| 22 | நிர்மாண ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் | ரூ.5000 |

**தொடர்புகள் - 0769104905**
**மின்னஞ்சல் முகவரி : giribawaps@gmail .com**
**2023.08.21**

**எச்.எம்.எஸ்.ஹேரத்,**
**செயலாளர்**
**கிரிபாவ பிரதேச சபை**

---

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# கேள்வி அறிவித்தல்

## தொம்பே பிரதேச சபை - கிரிந்திவெல

தொம்பே பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வார சந்தை, இறைச்சிக்கடை, மீன் கடை மற்றும் ஏனைய சொத்துக்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலஎல்லைக்கு வர்த்தக உரிமையை குத்தகைக்கு வழங்கும் முகமாக சீல் இடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.09.13 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறத்தல் கிரிந்தவெலவில் அமைந்துள்ள தொம்பே பிரதேச சபை தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும். அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அனுமதியளிக்கப்படும்.

| தொ. இல. | இடம் | குறைந்தபட்ச கேள்வி 2024 | கேள்விப்பிணைத் தொகை |
|---|---|---|---|
| | வேகே உப அலுவலகம் | | |
| 1 | கிரிந்திவெல வார சந்தை | 8745000/- | 437250/- |
| 2 | கிரிந்திவெல மாட்டிறைச்சிக் கடை | 790000/- | 39500/- |
| 3 | கிரிந்திவெல பன்றியிறைச்சிக் கடை | 1029600/- | 51480/- |
| 4 | கிரிந்திவெல கோழியிறைச்சிக் கடை | 886000/- | 44300/- |
| 5 | கிரிந்திவெல பொது மலசலகூடம் | 200200/- | 100101/- |
| 6 | கிரிந்திவெல வாகன நிறுத்துமிடம் | 336600/- | 16830/- |
| 7 | வாரச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள ஹெல பொஜுன் ஹல | 273000/- | 13650/- |
| | பூகொட உப அலுவலகம் | | |
| 1 | பூகொட வார சந்தை | 505000/- | 22250/- |
| 2 | பூகொட மாட்டிறைச்சிக் கடை | 75600/- | 37800/- |
| 3 | பூகொட பன்றியிறைச்சிக் கடை | 660000/- | 33000/- |
| 4 | பூகொட கோழியிறைச்சிக் கடை | 261000/- | 13050/- |
| 5 | பூகொட மலசலகூடம் | 105600/- | 5280/- |
| 6 | பூகொட மீன்கடை | 660000/- | 33000/- |
| | தொம்பே உப அலுவலகம் | | |
| 1 | தொம்பே சனி வாரச்சந்தை | 935000/- | 46750/- |
| 2 | தெக்கட்டன செவ்வாய் சாரச்சந்தை | 810000/- | 40500/- |
| | கூரகல உபஅலுவலகம் | | |
| 1 | கூரகல வாரச்சந்தை | 170000/- | 8500/- |

**கேள்வி நிபந்தனைகள்**

1. கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் 2023.09.12 பி.ப. 2.30 வரை இடம்பெறும் கேள்விப் படிவக் கட்டணம் ரூ. 2000 ஆகும்.
2. குறைந்தபட்ச கேள்வி ரூபா 01 இலட்சத்திற்கு குறைந்த சொத்துக்கள் பிரதேச ரீதியாக பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.
3. கீழ்க்காணுமாறு கேள்விப்படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகள் பெற்றுக் கொள்வதற்காக வருமான சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்காதவர்களுக்கு கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

| | |
|---|---|
| 02 - 05 இலட்சம் வரை | 01 இலட்சம் கொண்ட வருமானச் சான்றிதழ் |
| 05 - 10 இலட்சம் வரை | 02 இலட்சம் கொண்ட வருமானச் சான்றிதழ் |
| 10 - 15 இலட்சம் வரை | 03 இலட்சம் கொண்ட வருமானச் சான்றிதழ் |
| 15 - 20 இலட்சம் வரை | 04 இலட்சம் கொண்ட வருமானச் சான்றிதழ் |
| 20 இலட்சத்திற்கு மேல் | 05 இலட்சம் கொண்ட வருமானச் சான்றிதழ் |

04. கேள்விப் படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறு வேறு உறைகளில் இட்டு அவ்உறைகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு ஒரே உறையில் இட்டு அவ்உறைகளை சீல் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரங்களை செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதகிாரி, தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல என்ற முகவரிக்கு குறித்த தினம் குறித்த நேரத்திற்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் கேள்வியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**கவனிக்கவும்**:
இதற்கான ஏனைய நிபந்தனைகள் விவரமாக கேள்வி விண்ணப்பங்களுடன் வழங்கப்படும். மேலதிக விசாரணைகள் கீழ்க்காணும் தொ. பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

செயலாளர் 033-2269260

**டீ. அஜித் ரணசிங்ஹ**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி,**
**தொம்பே பிரதேச சபை,**
**கிரிந்திவெல.**

2023.08.17

---

# விலைக் கோரலுக்கான அழைப்பு

## 2023ஆம் வருடத்தில் 03 கோழிக் கூடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்

## விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

### வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் திறப்பனே விலங்குப் பண்ணையில் நிர்மாணிப்பதற்குள்ள கோழிக் கூடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து மாகாணப் பணிப்பாளர் / பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொ. இல. | பொருள் விபரங்கள் | சராசரி மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | கோழிக் கூடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான Zn/Al கூரைத் தகடுகளைக் கொள்வனவு செய்தல் | 3.5 | 52,000.00 | 2,500.00 |
| 02 | கோழிக் கூடுகளின் கூரைக்குத் தேவையான இரும்புகளைக் கொள்வனவு செய்தல் | 2.6 | 39,000.00 | 2,500.00 |
| 03 | கோழிக் கூடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அரியப்பட்ட மரங்களைக் கொள்வனவு செய்தல் | 1.8 | 26,000.00 | 2,500.00 |

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2023 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி முதல் 2023 செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அனுராதபுரம் கொடகே மாவத்தையில் அமைந்துள்ள மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண அலுவலகத்திற்கு 2,500.00 ரூபா மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களுடன் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் (2023 செப்டெம்பர் 12) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து 2023 செப்டெம்பர் 12ஆம் திகதி 03.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் மாகாணப் பணிப்பாளர் / தலைவர், பெறுகைக் குழு, மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொடகே மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாணப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து 2023 செப்டெம்பர் 12ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இந்த பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்கள் தேவையாயின் 025-2222533 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அனுராதபுரம்.**

# கேள்வி அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

### பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகம் – நுவரெலியா

விவசாயத் திணைக்களத்தின் நுவரெலிய பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகத்திற்கு கீழ்க்காணும் வேலைக்காக உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | |
| | | | காசு மூலம் | வங்கிப் பிணை மூலம் | பிணை செல்லுபடி காலம் |
| 01 | கந்தபொல பண்ணையில் 27 ஸ்ரீ 2901 இலக்க லொறிக்கு லொறி பொடியொன்றை பொருத்துதல் | நுஏ/பிவப/டெ/ஜாத/2023/10 | 10,000.00 | 20,000.00 | 2023.11.14 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்டு பெற்றுக் கொண்ட கேள்விப் படிவத்தைப் பாவித்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டியதுடன் நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) மணிமனையில் பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரியிடம் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இவ் அலுவலகத்தின் பிரதம முகாமைத்துவ சேவை அதிகாரியிடம் சமர்ப்பித்து 2023.08.22 முதல் 2023.09.11 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளையும் 'தலைவர், பிரதேச பெறுகைக் குழு பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், சந்ததென்ன வீதி, நுவரெலியா என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல கேள்விதாரர்களும் மேற்படி அட்டவணையின் D இன் கீழ்க் குறிப்பிடப்படுமாறு பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் வங்கிப் பிணை முறியின் மூலம் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023.09.12 முற்பகல் 10.00 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்விகள் சமர்ப்பித்தவர்களுக்கு அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகை குழு,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகம்,**
**சந்ததென்ன வீதி, நுவரெலியா.**

**052-2222611.**

The Housewives' companion
Classifieds on
Daily News

கடுவளை மாநகர சபை

# கேள்வி கோரலுக்கான அழைப்பு

## 2023/2024

கடுவளை மாநகர சபை சார்பில், மாநகர ஆணையாளரினால் பின்வரும் வேலைகளை ஒரு வருட காலத்திற்குள் நிறைவேற்றிக் கொள்வதற்காக தகுதி வாய்ந்த மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறி | தகுதிக்கான தேவைப்பாடு |
|---|---|---|---|---|
| 01 | கால்நடை மருத்துவத் திணைக்களம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு (அத்துருகிரிய/கடுவளை/பத்தரமுல்ல) கடமை நடவடிக்கைகளுக்காக வாடகை அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருள் சகிதம் 04 வேன்களைப் பெற்றுக்கொள்ளல் (கேள்வி இல. KMC/03/04(iii)/85/2023) | 2,000.00 | 15,000.00 | இலங்கையின் வாகன உரிமையாளர்கள் அல்லது வாடகைக்கு வாகனம் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் |
| 02 | ''ரன்பெலெஸ்ஸ'' குப்பை முகாமைத்துவ நிலையத்திலிருந்து கெரவலப்பிட்டிய துப்புரவேற்பாட்டு காணி நிரப்புதலுக்கு 10 தொன் குப்பை போக்குவரத்திற்கு 10 தொன் கொள்ளளவுடைய 02 லொறிகளைப் பெற்றுக்கொள்ளல் (சாரதி மற்றும் எரிபொருள் சகிதம்) (கேள்வி இல. KMC/03/04/01/2023) | 2,000.00 | 30,000.00 | இலங்கையின் வாகன உரிமையாளர்கள் அல்லது வாடகைக்கு வாகனம் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் |
| 03 | ''ரன்பெலெஸ்ஸ'' குப்பை முகாமைத்துவ நிலையத்திலிருந்து கெரவலப்பிட்டிய வெஸ்டர்ன் பவர் மின்பிறப்பாக்கி செயற்றிட்டத்திற்கு குப்பைகளை போக்குவரத்து செய்வதற்கு 10 தொன் கொள்ளளவுடைய 02 லொறிகளைப் பெற்றுக்கொள்ளல் (சாரதி மற்றும் எரிபொருள் சகிதம்) (கேள்வி இல. KMC/03/04/01/2023) | 2,000.00 | 30,000.00 | இலங்கையின் வாகன உரிமை யாளர்கள் அல்லது வாடகைக்கு வாகனம் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் ஆவணத்தின் குறிப்பிடப் பட்டுள்ளதன் பிரகாரம் |

02. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் முறையின் பிரகாரம் கேள்விகள் கோரப்படும்.
03. தகைமை வாய்ந்த கேள்விதாரர்கள் ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் தலைமை அலுவலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள மாநகர நிதித் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்தியதன் பின் மாநகர ஆணையாளரின் பெயரில் செய்யப்படும் வேண்டுகோள் ஒன்றை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023-08-22ஆம் திகதி முதல் 2023-09-11ஆம் திகதி வரையில் தேவையான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்விதாரர்கள் தமது கேள்விகளுடன் மேற்கூறப்பட்ட கேள்விப் பிணையின் பெறுமதிக்கு மாநகர நிதித் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட இரு பிரதிகளிலான கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் மேற்கூறப்பட்ட கேள்வி இலக்கம் மற்றும் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு 2023-09-11ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் மாநகர ஆணையாளர், மாநகர நிதித் திணைக்களம், கடுவளை மாநகர சபை, கடுவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். இந்த நேரத்தின் பின் எந்த கேள்விகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
06. அன்றைய தினமே மு.ப. 10.30 மணியின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
07. மேலதிக விபரங்களுக்கு மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரைக்கிடையில் கடுவளை மாநகர சபையின் வழங்கல் பிரிவைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல. 0112571200/0112539562)
**தில்ருக்ஷி கமகே,**
**மாநகர ஆணையாளர் மற்றும்**
**அதிகாரம் வாய்ந்த காரியங்களை செயற்படுத்தும் அதிகாரி,**
**கடுவளை மாநகர சபை, கடுவளை.**
**2023-08-22.**

# ஏஎம்டபிள்யூ கப்பிட்டல் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்ஸீ

## நிதிக்கூற்று அறிக்கைகளின் பிரசுரம்

### 2023 ஜூன் 30இல் முடிவடைந்த 6 மாதங்களுக்கான முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

| ரூபா மில்லியனில் | நடைமுறை காலம் 2023<br>01.01.2023 இலிருந்து 30.06.2023 வரை | முன்னைய காலம் 2022<br>01.01.2022 இலிருந்து 30.06.2022 வரை |
|---|---|---|
| வட்டி வருமானம் | 710 | 787 |
| வட்டிச் செலவு | (320) | (349) |
| **தேறிய வட்டி வருமானம்** | **390** | **438** |
| ஏனைய வருமானம் | 93 | 153 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (314) | (280) |
| பெறுமதி இழப்பு | (177) | (60) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **(8)** | **251** |
| வரிகள்* | (22) | (111) |
| **ஆண்டிற்கான வருமானம்** | **(30)** | **140** |

* நேரடியற்ற வரிகள் (நிதிச்சேவை மீதான பெ.சே.வ போன்ற) மற்றும் நேரடி வரிகள் (நிறுவன வருமான வரி) உள்ளடங்கலாக

### 2023 ஜூன் 30இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள் (கணக்காய்வு செய்யப்படாதது)

| ரூபா மில்லியனில் | 30.06.2023இல் உள்ளவாறு | 30.06.2022இல் உள்ளவாறு |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 277 | 651 |
| அரச பிணையங்கள் | 1,343 | 852 |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை நீங்கலாக) | 5,821 | 9,042 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 2 | 2 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 38 | 34 |
| ஏனைய சொத்துக்கள் | 249 | 264 |
| **மொத்த சொத்துக்கள்** | **7,729** | **10,845** |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 2,069 | 4,363 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 1,295 | 2,163 |
| ஏனைய பொறுப்புக்கள் | 827 | 855 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **4,191** | **7,381** |
| **பங்குரிமை மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 200 | 200 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 177 | 165 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 3,160 | 3,098 |
| ஏனைய ஒதுக்குகள் | 1 | 2 |
| **மொத்த பங்குரிமை மூலதனம்** | **3,538** | **3,465** |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமைப் பங்கு** | **7,729** | **10,846** |
| **பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி** | **177** | **173** |

குறிப்பு: கூறப்பட்ட தொகை பெறுமதி இழப்பு மற்றும் தேய்மானம் நீங்கலானவையாகும்.

### தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்

| விடயம் | 30.06.2023இல் உள்ளவாறு | | 30.06.2022இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|
| | உண்மை | தேவையானது | உண்மை | தேவையானது |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 37.98% | 8.50% | 27.45% | 7.00% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 37.98% | 12.50% | 27.45% | 11.00% |
| வைப்பு பொறுப்புகளுக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 266.96% | 10.00% | 153.65% | 10.00% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | 28.27% | | 11.99% | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 12.03% | | 6.27% | |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | 33.35% | | 18.90% | |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | 57.44% | | 80.93% | |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | 9.15% | | 9.57% | |
| சொத்துக்கள் மீதான வருவாய் (வரிக்கு முன்) | -0.16% | | 5.05% | |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் (வரிக்கு பின்) | -1.67% | | 8.61% | |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | 65% | | 47% | |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | 1090% | | 488% | |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | 44% | | 18% | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 22 | | 22 | |
| சேவை நிலையங்களின் எண்ணிக்கை | 0 | | 0 | |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் (பிட்ச் தரப்படுத்தல்) | BBB (lka) Rating Watch Negative | | BBB+ (lka) Rating Watch Negative | |

**2020 ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தின் பணிப்புரை இலக்கம் 01 இன் படி கடன் வசதிகளை செயல்படாத கடன்கள் என வகைப்படுத்துதல் (120 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை) மற்றும் ஒழுங்குமுறை பெறுமதி இழப்பு தேவைகள் 01.04.2023 முதல் மாற்றப்பட்டுள்ளன.

**உறுதிப்படுத்தல்:**

ஏஎம்டபிள்யூ கப்பிட்டல் லீஸிங் மற்றும் பினான்ஸ் பீஎல்ஸீ நிறுவனங்களின் பணிப்பாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரி, பொது முகாமையாளர்-நிதி மற்றும் இணைக்கத் தலைவர் ஆகிய நாங்கள் இணைந்து மேல் குறிப்பிப்பட்டவை உண்மையானவை என்று கீழே கையொப்பமிட்டு உறுதிசெய்கின்றோம்.

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

**சாமத் முனசிங்க (ஒப்பம்)**
பணிப்பாளர் / தலைமை நிறைவேற்று அதிகாரி
திகதி: 09.08.2023

**இந்திக பெரேரா (ஒப்பம்)**
பொது முகாமையாளர் - நிதி
திகதி: 09.08.2023

**பூர்ணிமா லெனோரா (ஒப்பம்)**
இணைக்கத் தலைவர்
திகதி: 09.08.2023

AMW CAPITAL LEASING
YOUR DESIRE. OUR PASSION.

**ஏஎம்டபிள்யூ கப்பிட்டல் லீஸிங் அன்ட் பினான்ஸ் பீஎல்ஸீ**

**இல. 185, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி - 011 2 309 300**

Fitch Rating BBB (lka)

கம்பனி பதிவிலக்கம். PB 14 PQ
2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் அடிப்படையில் மத்திய வங்கியின் நாணயச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றது.

# வடக்கின் உதயம்

## முல்லைத்தீவில் படகுகள் தீக்கிரை

ஓமந்தை விசேட நிருபர்

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் மீனவர்களின் நான்கு படகுகள் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் முழுமையாக எரித்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்ற அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் படகுகளே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் தண்ணிமுறிப்பு குளப்பகுதியில் வைத்து 6 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீனவர்களின் படகுகள் தொடர்ச்சியாக சேதமாக்கப்பட்டு வருவதாகவும் அப்பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குரிய இழப்பீட்டை வழங்க வேண்டும் எனவும் மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



நல்லூர் கந்தசுவாமி கோயிலில் புதிய சப்பரத்தின் வெள்ளோட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம்: யாழ். விசேட நிருபர்)

## டிப்பர் வாகனம்- மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்து

### குடும்பஸ்தர் பலி

ஓமந்தை விசேட நிருபர்

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும் பரந்தனிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதால் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

பரந்தன் உமையாள்புரம் பகுதியைச் சேர்ந்த தர்மலிங்கம் நகுலேஸ்வரன் என்ற 47 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

கைது செய்யப்பட்ட வாகனத்தின் சாரதி முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## யாழ். செம்மணியில் மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டம் ஆரம்பம்

பருத்தித்துறை விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்



பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் பருவகால மாற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் 1000 மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டம் நேற்று யாழ். செம்மணி பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலாளர் இ.பகீரதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மரநடுகை திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரணவநாதன், நல்லூர் பிரதேசசபை செயலாளர் யு.ஜெலீபன், வலிகாமம் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார், செம்மணி இந்து மயான தலைவர் இ.லட்சுமிகாந்தன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பா.பிரதீபன், நல்லூர் வடக்கு சனசமூக நிலைய தலைவர் பூ.லிங்கநாதன், நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய தலைவர் இ.ரூபன் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பிரதேச கிராம மக்களும் கலந்து கொண்டனர்.

## சிறப்பாக செயற்படும் மன்னார் மாவட்ட வைத்தியசாலை குருதி சுத்திகரிப்பு பிரிவு

மன்னார் குறூப் நிருபர்





நாடளாவியரீதியில் நிலவும் மருந்து தட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை குருதி சுத்திகரிப்பு பிரிவு சிறப்பாக செயற்பட்டுவருகின்றது.

வைத்தியர் சிசில் மற்றும் வைத்தியர் மல்ஷா தலைமையின் கீழ் இயங்கும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை குருதி சுத்திகரிப்பு பிரிவில் தற்போது 60 சிறுநீரக நோயாளர்கள் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இப்பிரிவு ஊடாக வழங்கப்படும் சேவை காரணமாக சிறுநீரக பிரச்சினைகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாக குறைந்துள்ளன.

குறிப்பாக மருந்து தட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளையும் கடந்து உள்ளூர் மற்றும் வெளியூர் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கும் விதமாக இச்சிகிச்சை பிரிவு கடந்த ஐந்து வருடங்களில் பாரிய வளர்ச்சி கண்டுள்ளது.

கடந்த 2018 க்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் சிறுநீரக சிகிச்சை பிரிவு இன்மையால் பல சிறுநீரக நோயாளர்கள் சாதாரண சிகிச்சைகளுக்கு கூட மன்னார் மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய அவல நிலை காணப்பட்டது.

அதிலும் அவசர நோயாளர்கள் பலர் சிகிச்சை நிலையங்களுக்கு மன்னாரிலிருந்து அனுப்பப்படுவதற்கு முன்னர் பல உபாதைகளுக்கு உள்ளாகியிருந்த கசப்பான அனுபவங்களும் உண்டு.

இதை விட கடந்த 2017 ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுநீரக நோயாளியொருவர் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் சென்று திரும்பிய போது பஸ் தரிப்பிடத்தில் இறந்த சம்பவமொன்றும் மன்னாரில் பதிவாகியிருந்தது.

இவ்வாறான நிலையில் மன்னார் மாவட்டத்தில் சிறுநீரக சிகிச்சை நிலையத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து 2018 ஆம் ஆண்டு சாதாரண இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது அப்பிரிவில் பணிபுரியும் வைத்தியர்கள், தாதியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக 60 நோயாளிகளை பராமரிக்கக்கூடிய அளவில் சிறந்த சிகிச்சைகளை இப்பிரிவு வழங்கிவருகின்றது. மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய வகையில் 140 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயனடையும் வகையில் இச்சிகிச்சை பிரிவு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம் இச்சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சிறுநீரக நோய் காரணமாக உயிரிழப்போர் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாரத்தில் ஏழு நாட்களும் இப்பிரிவு இயங்கிவருகின்றது.

ஒரு சிறுநீரக நோயாளி கட்டாயம் கிழமைக்கு 2 அல்லது 3 முறை இந்நிலையத்திற்கு வருகை தந்து இரத்த சுத்திகரிப்பில் ஈடுபடுவது அவசியம். சாதாரணமாக ஒரு நோயாளிக்கு இரத்த சுத்திகரிப்புக்கு நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படும் நிலையில் மாதத்துக்கு குறைந்தது 500 தடவைகள் சுத்திகரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை தவிர பாம்பு கடி ,சலரோகம்,சிறுநீர் கிருமிதொற்று போன்ற பிரச்சினைகள் காரணமாக வைத்தியசாலைக்கு வருகை தரும் அவசர நோயாளிகளுக்கான இரத்த சுத்திகரிப்பு சேவை இந்நிலையத்தால் மேற்கொண்டுவருகின்றனர்.

## வரணி குருநாதர் கோயிலின் வசந்த மண்டப மகா கும்பாபிஷேக பெருவிழா

சாவகச்சேரி விசேட நிருபர்

தென்மராட்சி வரணி மாசேரி புராதன குருநாதர் கோயிலின் வசந்த மண்டப மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை 6.09 தொடக்கம் 7.31 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கும்பாபிஷேக நிகழ்வுகள் கும்பாபிஷேக பிரதிஷ்ட பிரதம குரு சைவப்புலவர் சிவத்திரு வே.இ.க.சி.கா கமலநாதன் ஐயா தலைமையில் நடைபெறவுள்ளன.

## யாழில்.வன்முறை கும்பல் அட்டகாசம் ; 20 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுக்கு தீவைப்பு

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் அங்கிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கு தீ வைத்ததுடன் , வீட்டின் மீதும் தாக்குதல் மேற்கொண்டு அங்கிருந்த உடைமைகளுக்கும் தீ வைத்துள்ளது. வீட்டார் வெளியூர் சென்றிருந்த சமயம் , வீட்டில் மகன் மட்டுமே இரவு இருந்துள்ளார். அவ்வேளை வீட்டினுள் வன்முறை கும்பலொன்று நுழைவதை அவதானித்து அவர் வீட்டிலிருந்து தப்பியோடியுள்ளார்.

அதனையடுத்து வீட்டினுள் நுழைந்த வன்முறை கும்பல் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெறுமதியான இரண்டு மோட்டார் சைக்கிள்களை தீயிட்டு கொளுத்தியதுடன் , வீட்டிலிருந்த உடைமைகளையும் அடித்து உடைத்து சேதமாக்கி தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளனர். தீ வைப்பு சம்பவத்தினால் சுமார் 20 இலட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மலைச்சாரல்



மாத்தளை மாவட்டத்தில் எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்துக்குட்பட்ட ரத்வத்தை தோட்டப் பகுதியில் உதவி முகாமையாளரால் தோட்ட தொழிலாளியொருவரின் வீடு சேதமாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார். இதனையடுத்து நேற்று முன்தினம் அப்பகுதிக்கு சென்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான், தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடியதன் பயனாக உதவி தோட்ட முகாமையாளரை பணி நீக்கம் செய்வதற்கு தோட்ட நிர்வாகம் இணங்கியுள்ளது. அத்துடன், குறித்த உதவி முகாமையாளரால் சேதமாக்கப்பட்ட வீட்டுக்கு பதிலாக பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு புதிய வீடொன்றை நிர்மாணித்து கொடுக்கவும் நிர்வாகம் இணங்கியுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் தோட்ட மக்களிடம் பகிரங்கமாக நிர்வாக தரப்பினர் மன்னிப்பு கோரினர்.

## காசல்ரீ நீர்த்தேக்கப் பகுதியில் காடுகளுக்கு தீவைக்கும் விஷமிகள்

ஹற்றன் விசேட நிருபர்



நாட்டின் மின் உற்பத்திக்கு பாரியளவில் பங்களிப்பு செய்யும் காசல்ரீ நீர்த்தேக்கப்பகுதியிலுள்ள காடுகளுக்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கபப்பட்டுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர். தீ வைப்பு சம்பவம் நேற்றுமுன்தினம் பி.ப 1.45 மணியளவில் காசல் ரீ நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டுக்கு சமீபமாக வனப்பாதுகாப்பு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

தீ பரவல் காரணமாக சுமார் 02 ஏக்கர் வரை எரிந்து நாசமாகியிருப்பதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இதனால் அரிய வகை தாவரங்கள் நீரூற்றுக்கள்,மற்றும் சிறிய உயிரினங்கள் ஆகியன அழிந்து போயிருக்கலாம் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தீயைக் கட்டுப்படுத்துவதற்கு மின்சார சபை ஊழியர்கள்,மற்றும் இராணுவ அதிகாரிகள், பிரதேசவாசிகள் இணைந்து நடவடிக்கை எடுத்து வருவதாக பாதுகாப்பு பிரிவினர் மேலும் தெரிவித்தனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையை தொடர்ந்து நீரேந்து பிரதேசங்களிலும் நீர்மட்டம் குறைவடைந்து வருகின்றது. இதனால் காசல் ரீ நீர்த்தேக்கம் ,உள்ளிட்ட பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வருகின்றன. எனவே வனப்பிரதேசங்களுக்கு தீ வைப்பதை உடன் நிறுத்துமாறு சூழல் பாதுகாப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கடும் வரட்சி- நீர் தேடி ஊருக்குள் நுழையும் வனஜீவராசிகள்

ஊவா சுழற்சி நிருபர்



நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக ஊவா மாகாணத்திலுள்ள பிரதான குளங்கள், நீர்நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. குறிப்பாக சரணாலயம், அரச வனப்பகுதி போன்ற இடங்களிலுள்ள நீர்நிலைகளின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்து வருகின்றது. இதனால் அப்பகுதிலுள்ள மிருகங்கள், பறவைகள் போன்றவற்றுக்கு பெரும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாகவும் வன இலாகா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக யால, கதிர்காமம், வெள்ளவாய ,கொஸ்லந்த,பண்டாரஎலிய, ஹல்துமுல்ல,ஆலட்டு தென்ன,மரியறாவ,மஹியங்கனை போன்ற பிரதேசங்களில் கடும் வரட்சி நிலவுகின்றது. இதனால் வனஜீவராசிகள் ஊருக்குள் நுழைவதாகவும் பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 ஓகஸ்ட் 22 செவ்வாய்க்கிழமை



## ஆசிய கிண்ணத்திற்கான இந்திய குழாம் அறிவிப்பு

ஆசிய கிண்ண தொடருக்கான இந்திய குழாத்தில் உபாதையில் இருந்து மீண்டு வந்துள்ள கே.எல். ராகுல் மற்றும் ஷிரேயாஸ் ஐயர் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தான் மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண தொடருக்காக ரோஹித் ஷர்மா தலைமையிலான 17 பேர் கொண்ட இந்திய குழாம் நேற்று (21) அறிவிக்கப்பட்டது. இதில் இதுவரை ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடி அனுபவம் அற்ற இடதுகை துடுப்பாட்ட வீரர் திலக் வர்மா சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆசிய கிண்ண தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்திய அணி தனது முதல் போட்டியில் எதிர்வரும் செப்டெம்பர் 2ஆம் திகதி பல்லேகலவில் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இந்திய குழாம்: ரோஹித் ஷர்மா (தலைவர்), ஷுப்மன் கில், விராட் கொஹ்லி, ஷ்ரேயாஸ் ஐயர், கே.எல். ராகுல் (வி.கா.), ஹார்திக் பாண்டியா (உப தலைவர்), ரவிந்திர ஜடேஜா, ஜஸ்பிரிட் பூம்ரா, குல்தீப் யாதவ், மொஹமட் சிராஜ், மொஹமட் ஷமி, இஷான் கிஷன் (வி.கா.), ஷர்துல் தகூர், அக்சார் படேல், சுர்யகுமார் யாதவ், திலக் வர்மா, பிரசித் கிரிஷ்னா.

## சம்பியனானது லீ ஸ்டார்



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு டிஸ்கோ விளையாட்டு கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று லீ ஸ்டார் விளையாட்டு கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது. காந்தி ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு அந்தோணிஸ் அணியை எதிர்கொண்ட லீ ஸ்டார் நிர்ணயிக்கப்பட்ட 56 ஓட்ட வெற்றி இலக்கை ஐந்து விக்கெட்டுகளை இழந்து எட்டியது.



கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கண்டுகளித்தார். இறுதிப் போட்டியை பார்வையிட வருகைதந்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடினார். அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஆகியோரும் போட்டியை கண்டுகளித்தனர்.

# முதலிடத்தை வென்றது நாவிதன்வெளி கோட்டம்



**காரைதீவு குறூப் நிருபர்**

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் 469 புள்ளிகளைப் பெற்று நாவிதன்வெளிக் கோட்டம் முதலிடத்தை சுவீகரித்துக்கொண்டது.

இரண்டாம் இடத்தை 435 புள்ளிகளைப் பெற்ற சம்மாந்துறை கோட்டமும், மூன்றாம் இடத்தை 183 புள்ளிகளைப் பெற்ற இறக்காமம் கோட்டமும் பெற்றுக்கொண்டன. சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

நாவிதன்வெளி கோட்டத்தில் 171 ஆண்களும் 298 பெண்களும் இந்த 469 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# அறிமுகத் தொடரிலேயே சம்பியன் கிண்ணம் வென்றது பி லவ் கண்டி

லங்கா பிரீமியர் லீக் தொடரின் பரபரப்பான இறுதிப் போட்டியில் தம்புள்ளை அவுரா அணியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தி பி லவ் கண்டி முதல் முறை சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற போட்டியில் குசல் மெண்டிஸ் தலைமையிலான தம்புள்ளை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களுக்கும் 4 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களை பெற்றது. தனஞ்சய டி சில்வா 29 பந்துகளில் 40 ஓட்டங்களை பெற்றார்.




கண்டி அணித் தலைவர் வனிந்து ஹசரங்க உபாதையால் இறுதிப் போட்டியில் ஆடாத நிலையில் அஞ்சலோ மத்தியூஸ் தலைவராக செயற்பட்டார். இதன்படி பதிலெடுத்தாடிய கண்டி அணி கடைசி ஓவர் வரை போராடி 19.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 151 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப வீரராக வந்த கமிந்து மெண்டிஸ் 37 பந்துகளில் 44 ஓட்டங்களை பெற்றதோடு மத்தியூஸ் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களை பெற்று வெற்றியை உறுதி செய்தார்.

இதன்படி முதல் முறை லங்கா பிரீமியர் லீக்கில் அறிமுகமான பி லவ் கண்டி முதல் தொடரிலேயே சம்பியனானதோடு தம்புள்ளை அவுரா தொடரில் இரண்டாம் இடத்தை பிடித்ததும் இது முதல் முறையாகும்.

# ஸ்பெயின் வீராங்கனைக்கு உலகக் கிண்ணத்துடன் தந்தையின் மரண செய்தி

பிஃபா மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் கோல் பெற்று ஸ்பெயின் அணியை வெற்றிபெறச் செய்த அந்த அணியின் தலைவி ஒல்கா கார்மோனா போட்டிக்கு பின்னரான வெற்றி கொண்டாட்டம் தணிவதற்குள் அவரது தந்தை மரணித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணி 1–0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

எனினும் நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த கார்மோனாவின் தந்தை கடந்த வெள்ளிக்கிழமை (18) மரணித்துள்ளார். இறுதியாட்டத்தில் கவனம் சிதறாமல் விளையாடுவதை உறுதிசெய்ய தந்தை இறந்த தகவலை கர்மோனாவிடம் முன்கூட்டியே கூறவில்லை என்று அவரின் குடும்பத்தார் தெரிவித்தனர். “இன்றிரவு நீங்கள் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றும், நீங்கள் என்னைப் பற்றி பெருமைப்படுகிறீர்கள் என்றும் எனக்குத் தெரியும்” என்று உலகக் கிண்ணத்தில் வென்ற பதக்கத்தை முத்தமிடும் படத்துடன் கர்மோனா சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார். கர்மோனாவுக்கும் அவரின் குடும்பத்துக்கும் ஸ்பெயின் கால்பந்துச் சங்கமும் அவர் ஆடும் ரியல் மெட்ரீட் கால்பந்து அணியும் அனுதாபம் தெரிவித்துள்ளன.



# பக்தாத் விளம்பர திரையில் ஆபாசப் படத்தால் பரபரப்பு



ஈராக் தலைநகர் பக்தாதில் உள்ள மின்னணு விளம்பர திரை ஒன்றில் ஊடுருவியால் ஆபாசப் படம் கண்பிக்கப்பட்டதை அடுத்து நகரில் உள்ள அனைத்து விளம்பர திரைகளையும் நிறுத்தும்படி அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

பக்தாதில் இருக்கும் பிரதான வீதி ஒன்றின் சந்தியில் உள்ள திரையிலேயே ஆபாசப் படம் காண்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வீடியோ சமூக தளத்தில் பரவியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதில் இந்த விளம்பர திரையை நடத்தும் நிறுவனத்துடன் பண விவகாரம் தொடர்பில் பிரச்சினைப்பட்ட தொழில்நுட்பவியலாளர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பழிவாங்குவதற்காகவே இவ்வாறு செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடுருவி பல நிமிடங்களாக ஆபாசப் படத்தை காண்பித்த நிலையில் அந்தத் திரையின் மின்சார வயர் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகரின் அனைத்து மின்னணு திரைகளும் ஞாயிறு அணைக்கப்பட்டுள்ளன.

# அமெரிக்காவில் கூடுதல் கொவிட் திரிபு தடுப்பூசி

அமெரிக்க நிர்வாகம், புதிய வகை கொரோனா வைரஸுக்கு எதிரான கூடுதல் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுமாறு அந்நாட்டு மக்களை அறிவுறுத்தத் திட்டமிட்டுள்ளது. வரும் மாதங்களில் நோய்ச்சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்பதே அதற்குக் காரணம் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார்.

நோய்த்தொற்றுச் சம்பவங்களும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. ஆயினும் ஒட்டுமொத்த அளவு குறைவாகவே இருப்பதாக அந்நாட்டின் நோய்க் கட்டுப்பாட்டு, தடுப்பு நிலையம் தெரிவித்தது.

எக்.பி.பி.1.5 வகை வைரஸ் திரிபை எதிர்க்கக்கூடிய தடுப்பூசிகளை மொடர்னா, நொவாவக்ஸ், பைசர், பயோடெக் எஸ்.ஈ. ஆகிய நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன.

அவற்றுக்கு சுகாதார கட்டுப்பாட்டு அமைப்புகளிடமிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. ஆயினும் வரும் வாரங்களில் தடுப்பூசிகள் பயன்படுத்துவதற்கு தயாராகிவிடும் என்று நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன. சளிக்காய்ச்சல், சுவாச ஒத்திசைவு வைரஸ் தடுப்பூசிகளுடன் சேர்த்து, புதிய கொவிட் தடுப்பூசிகளையும் போட்டுக்கொள்ளுமாறு அமெரிக்கர்கள் ஊக்குவிக்கப்படுவதாக அந்த அதிகாரி கூறினார்.

## சர்வதேச செய்திகள்

# குடியேறிகள் சுட்டுக் கொலை: சவூதியின் மீது குற்றச்சாட்டு



யெமன் நாட்டு எல்லையையொட்டி சவூதி எல்லை காவல் படையினரால் பெரும் எண்ணிக்கையான குடியேற்றவாசிகள் கொல்லப்பட்டதாக மனித உரிமை கண்காணிப்பகத்தின் புதிய அறிக்கை ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

போர் நிலவும் யெமனைத் தாண்டி சவூதி அரேபியாவை அடைந்த எத்தியோப்பியர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நூற்றுக்கணக்கானோர் சுட்டுக் கொல்லப்பட்டதாக அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் கை, கால்கள் துண்டிக்கப்பட்டவர்கள் மற்றும் கைவிடப்பட்ட இறந்த உடல்களை கண்டதாக குடியேறிகள் பி.பி.சி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர். திட்டமிட்ட கொலைகளில் ஈடுபட்டதான குற்றச்சாட்டை சவூதி அரேபியா முன்னதாக மறுத்திருந்தது.

மனித உரிமை கண்காணிப்பகத்தின் இந்த அறிக்கையில் குடியேற்றவாசிகளின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு, சவூதி அரேபியாவுடனான யெமனின் வடக்கு எல்லையில் சவூதி பொலிஸார் மற்றும் படையினர் துப்பாக்கிச் சூடு மற்றும் சில நேரங்களில் வெடிக்கும் ஆயுதங்களை கொண்டு தாக்குதல் நடத்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். “துப்பாக்கிச் சூடு தொடர்ந்து இடம்பெற்றது” என்று 21 வயதான முஸ்தபா சூபி முஹமது என்பவர் பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான தம்முடன் வந்த குழுவில் 45 பேர் கொல்லப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளனர். இந்தக் குழுவினர் கடந்த ஆண்டு ஜூலையில் எல்லையை கடந்து சவூதிக்குள் ஊடுருவ முயன்றுள்ளனர்.

“நான் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதை உணரவில்லை. எழுந்து நடக்க முயன்றபோதே எனது கால் என்னுடன் இருக்கவில்லை என்பது எனக்குத் தெரிந்தது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் 200, 000க்கும் அதிகமான ஆபிரிக்காவின் கொம்புப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் கடலைக் கடந்து ஆபத்தான பாதையில் யெமனை அடைந்து பின்னர் சவூதி அரேபியாவை நோக்கி பயணிப்பதாக ஐ.நாவின் குடியேறிகளுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

## இஸ்ரேலிய பெண் சுட்டுக் கொலை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நகரான ஹெப்ரோனுக்கு அருகில் துப்பாக்கிச் சூடு ஒன்றில் இஸ்ரேலிய பெண் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் ஒருவர் காயமடைந்திருப்பதாக மருத்துவ மற்றும் இராணுவம் வட்டாரம் குறிப்பிட்டுள்ளது. மேற்குக் கரையின் ஹுவாரா சிறு நகரில் இஸ்ரேலிய தந்தை மற்றும் மகன் கொல்லப்பட்டு இரு நாட்களின் பின்னரே நேற்று (21) இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் பெண் கொல்லப்பட்ட நிலையில் அவருடன் காரில் பயணித்த மற்றைய நபர் படு காயத்திற்கு உள்ளாகி இருப்பதாக இஸ்ரேலிய அவசர சேவை தெரிவித்துள்ளது. வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தின் மீதே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலிய இலக்குகள் மீதான பலஸ்தீன தாக்குதல்கள், இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான சுற்றிவளைப்பு தேடுதல்கள் மற்றும் பலஸ்தீன சமூகங்களுக்கு எதிராக யூத குடியேற்றவாசிகளின் தாக்குதல்களுக்கு மத்தியில் மேற்குக் கரையில் கடந்த ஆண்டு ஆரம்பம் தொடக்கம் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

# பயங்கரவாதத்திற்கு நிதி: ஸ்பானிய இந்தியர் கைது

பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் திட்டமிட்ட படுகொலைகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களின் பேரில் ஸ்பெயினைச் சேர்ந்த இந்தியர் ஒருவர் பஞ்சாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹர்ஜீட் சிங் என்ற இந்திய வம்சாவளி ஸ்பானியரே பஞ்சாப் பொலிஸின் விசேட நடவடிக்கை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சுமார் ஒரு மாதத்திற்கு முன் இந்தியாவுக்கு வந்துள்ள இவர், பயங்கரவாதிகளுக்கு நிதியளித்து திட்டமிடப்பட்ட பல கொலைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்து விட்டு இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சர்வதேச விமானமொன்றில் ஸ்பெயினுக்கு பயணமாக இருந்த சமயமே கைது செய்யப்பட்டுள்ளார். இந்த கைது மூலம் திட்டமிடப்பட்ட பல கொலைகளை தடுத்து நிறுத்த முடிந்துள்ளது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.